உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி உங.] குரோதன௵ சித்திரை௴ [பகுதி சு.

Vol. XXIII. *April-May-1925.* No. 6.


## மதங்கசூளாமணி.

—✿✿✿✿—

### ஒழிபியல்.

[களஉ-ம் பக்கத் தொடர்ச்சி.]

ரு. ஆங்கிலமகாகவியாகிய சேகசிற்பியா ரியற்றிய நாடகங்களுள்ளும், வடநூற் பெரும்புலவராகிய தனஞ்சயனார் இயற்றிய தசரூபத்துள்ளும் பொதித்துகிடந்த நாடகலக்ஷணங்களை யியன்றவரை யாராய்ந்துணர்ந்தனம். இனி, நிறைவுநோக்கி அருந்தமிழ்நூல்களுட் பரந்துகிடக்கும் இசைநாடகமுடிபுகளுள் இயற்றமிழாராய்ச்சிக்கு இன்றியமையாதனவற்றை நான்குபிரிவாகத் தொகுத்துக்கூறுவாம்.

யாப்பியற்பாலவாகிய சொல்வகையும் வண்ணமும் உறுப்பியலுட் கூறப்பட்டன. இயலிசைநாடகப்பொருட்டொடர்நிலைச்செய்யுளாகியசிலப்பதிகாரத்தினுள் கானல்வரி, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி என மூன்று வரிப்பாடலும், ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவைஎனவிரண்டு குரவைப் பாடலும் வருகின்றன. இவ்வைந்தும் முறையே நெய்தல், பாலை, மருதம், முல்லை, குறிஞ்சி யென்னும் ஐவகைநிலனையும் சார்ந்துநிற்றலை நோக்குக. "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலும், எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப" எனவும், "வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும், அறியக் கூறி யாற்றுழி வழங்கல்" எனவும் கூறினாராகலின்,

இவை தம்முள்ளே வேறுபட்டமை காண்க. மேற்கூறியபடி, வரியாவது அவரவர்பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையுந் தோன்ற நடித்தல். ஒருவர்கூட்டவன்றித் தானேவந்து நிற்கும்நிலைமை கண்கூடுவரி; வந்தபின்னர் மனமகிழ்வுறுவனவற்றைத் தந்து நீங்குகின்றதன்மை காண்வரி; அரசர் பிறருருவங்கொண்டு ஆடுதலும், தலைமகளொருத்தி தனது சிலதியர்கோலத்தைக்கொண்டு தான் தனித்து வந்துநின்று நடிப்பதும் உள்வரி; தலைவன் முன்னிலையில்வாராது புறம்பேநின்று நடித்த நடிப்பு புறவரி; நடுநின்றார் இருவருக்குஞ் சந்து சொல்லக்கேட்டுநிற்பது கிளர்வரி; நாயகனது சுற்றத்தினருக்குத் தன்றுன்பங்களைத் தேடித்தேடிச்சொல்லுதல் தேர்ச்சிவரி; தனதுவருத்தத்தைப் பலருங் காணும்படி நடித்தல் காட்சிவரி; தான் கையறவெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர்எடுத்துக்கொள்ளும்படி நடித்தல் எடுத்துக்கோள்வரி; இவையனைத்தும் தனித் தொருவர்நடித்தநடிப்பாகக் கூறப்பட்டிருக்கின்றமை காண்க. குரவைக் கூத்துக் காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனுங் கைபிணைத்தாடுவது. குரவைக்கூத்துக்குக் குரவைச்செய்யுள் பாட்டாயினவாறுபோல வரிக்கூத்துக்குப் பாட்டாகவருவது வரிப்பாடல். இது அறுவகைப்பாவினுட் கலிப்பாவின்பாற்படும். யாப்பியல்வல்லார் இதனை முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி யென மூவகைப்படுத்தும் பிறவாற்றானும் ஆராய்வர். பொருணோக்கி யாராயுங்கால் திணைக்குரிப் பொருளைச் சார்ந்து நிற்கும் திணைநிலைவரியும் கருப்பொருட்பாலவாகிய ஆறு, பாட்டுடைத்தலைவன்பதி யென்றின்னவற்றைச்சார்ந்துநிற்கும் இணைநிலைவரியு மென இருவகையவாம். செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டிலம் என வந்த பத்துவகையிசைப்பாக்களுள் ஆற்றுவரியுங் கானல்வரியும் வருதல் காண்க.

நாடகங்களுக்குப் பாட்டுவகுக்குங்கால் அகநாடகங்களுக்குரிய உரு கந்த முதலாகப் பிரபந்தமீறாக இருபத்தெட்டு எனவும், புறநாடகங்களுக்குரிய உரு தேவபாணி முதலாக அரங்கொழிசெய்யு ளீறாகச் செந்துறைவிகற்பங்களெல்லா மெனவுங் கூறுப; இவையெல்லாம் இசைத்தமிழ்ப்பால, தாழ்ந்துசெல்லும் இயக்கத்தையுடைய முதனடை,

சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடைய வாரம், சொற்செறிவும் இசைச்செறிவு முடைய கூடை, முடுகியசெலவினையுடைய திரள் என்னும் நால்வகைச்செய்யுளியக்கமும் இசைத்தமிழின்பால.

சூ. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என நின்று முறையே நான்கு, நான்கு, மூன்று, இரண்டு, நான்கு, மூன்று, இரண்டு என்னும் மாத்திரையளவுகள் பெற்றுவரும் ஏழிசைகளும், இவற்றினுள் ஒன்றினை மற்றொன்றாகத் திரிக்கும் மரபும், தாரத்து உழைதோன்றப் பாலையாழ் ஆவதும், உழையினுட் குரல்தோன்றக் குறிஞ்சியாழ் ஆவதும், இளி குரலிற்றோன்ற மருதயாழ் ஆவதும், துத்தம் இளியிற்பிறக்க நெய்தல்யாழ் (செவ்வழியாழ்) ஆவதும், பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி யென்னும் நான்கு யாழ்களினது அகநிலை பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி யென்னும் பண்களாவதும், இவற்றது புறநிலை தேவாளி, செந்து, ஆகரி, வேளாவளி என்னும் பண்களாவதும், இவற்றது அருகியல் சீர்கோடிகம், மண்டிலம், சாயவேளர் கொல்லி, சீராகம் என்னும் பண்களாவதும், இவற்றது பெருகியல் நாகராகம், அரி, கின்னரம், சந்தி யென்னும் பண்களாவதும், குரல்குரலாகிய செம்பாலை துத்தங்குரலாகிய படுமலைப்பாலை கைக்கிளைகுரலாகிய செவ்வழிப்பாலை உழைகுரலாகிய அரும்பாலை இளிகுரலாகிய கோடிப்பாலை விளரிகுரலாகிய விளரிப்பாலை தாரம் குரலாகிய மேற்செம்பாலை யென்னும் எழுவகைப்பாலையும், ஆயப்பாலை சதுரப்பாலை திரிகோணப் பாலை வட்டப்பாலை யென்னும் நால்வகைப் பாலையும், கொட்டு மசையுந் தூக்கு மளவு மொட்டப் புணர்க்கும் பாணியும், செந்தூக்கு (ஒருசீர்), மதலைத்தூக்கு (இருசீர்), துணிபுத்தூக்கு (முச்சீர்), கோயிற்றூக்கு (நாற்சீர்), நிவப்புத் தூக்கு (ஐஞ்சீர்), கழாற்றூக்கு (அறுசீர்), நெடுந் தூக்கு (எழுசீர்) என்னும் எழுவகைத்தூக்கும், இணை கிளை பகை நட்பு என்னும் நரம்பி னியல்பும், யாழ் குழல் சீர் மிடறு என்னும் நான்கி னியல்பும், செம்பகை ஆர்ப்பு அதிர்வு கூடம் என்னும் நால்வகைக்குற்றமும், பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் செலவு விளையாட்டு கையூழ் குறும்போக்கு என்னும் எண்வகைக் கலைத்தொழிலும் பிறவும் இசைநூலிற் கூறியிருக்கும் மரபறிந்து அமைத்துக்கொள்க.

எ. அரங்கினமைதியை யாராய்வாம். அரங்கிற்கு நிலம்வகுத்துக் கொள்ளுமிடத்துத் "தெய்வத்தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமும் குளனும் காவு முதலாக வுடையன அழியாத இயல்பினை யுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண் நாற்றமும் மதுரநாறி இரதமும் மதுரமாகித் தானுந் திண்ணிதாய் என்பும் உமியும் கல்லும் பரலுஞ் சேர்ந்த நிலம் களித்தரை உவர்த்தரை ஈரத்தரை பொல்லாச் சாம்பற்றரை பொடித்தரை யென்று சொல்லப் பட்டன வொழிந்து ஊரின நடுவணதாகித் தேரோடும்வீதிகளெதிர்முக மாக்கிக்கொள்ளல்வேண்டுமெனக." அரங்கினளவு ஏழுகோலகலமும் எட்டுக்கோல்நீளமும் மூன்றுகோல்உயரமு மிருத்தல்வேண்டுமெனவும், [கோல் - இருபத்துநான்கு அங்குலம்], அரங்கினமேலிட்ட பலகைக்கும் அரங்கத்துத்தூண்மேலமைத்த உத்தரப்பலகைக்கும் இடைவெளித் தூரம் நான்குகோலிருக்கவேண்டுமெனவும், இடத்தூணிலையிடத்தே உருவுதிரையாய்ஒருமுகவெழினியும், இரண்டுவலத்தூணிடத்தும்உருவு திரையாய்ப் பொருமுகவெழினியும மேற்கட்டுத்திரையாகக் கரந்துவர லெழினியுங் கட்டப்படவேண்டுமெனவும் பண்டையோர் கூறுவர். பண்டைக்காலத்து அரங்கத்தில், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நால்வகைவருணத்தாரது தொழில் உருவம் என்னும் இவற்றைக் குறிப்பிட வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்த கேசுவரன் என்னும் நால்வகை வருணப்பூதருடைய உருவங்கள் எழுதி வைக்கப்பட்டிருந்தன; தூண்களின்நிழல் நாயகப்பத்தியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட நிலைவிளக்குகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஈண்டுக்கூறிய அளவு எழினி முதலியன நாடகக்கணிகை யாடுதற்குரிய அரங்கத்துக்காகும். இத்தகைய அரங்கத்தினுள் நலந்தருநாளில் வலக்கான் முன்மிதித்தேறி வலத்தூண் சேர்ந்துநிற்றல் அரங்கேறுகின்ற நாடகக்கணிகைக்கு வழக்கு எனப் பண்டையோர் கூறுவர். அவிநயத் தோடு நாட்டிச்செய்யும் கையினது இலக்கணத்தையும் ஈண்டுக் கூறுவாம். இணையாவினைக்கையாகிய பிண்டி, இணைக்கையாகிய பிணையல் என்னும் இரண்டினுள், பிண்டி முப்பத்துமூன்றுவகைப்படும். அவையாவன:—பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை,

அலாபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி என்பனவாம். பிணையல் பதினைந்துவகைப்படும். அவை யாவன:—அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம் என்பனவாம.

ஒற்றுமைபற்றி அகக்கூத்துக்குரிய ஆடல்களையும் புறக்கூத்துக்குரிய ஆடல்களையும் ஈண்டுத் தருவாம. சீற்று, கடிசரி, மண்டலம், வர்த்தனை, கரணம், ஆலீடம், குஞ்சிப்பு, கட்டுப்புரியம், களியம், உள்ளாளம், கட்டுதல், கம்பித்தல், ஊர்தல், நடுங்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுகால், இட்டுப்புகுதல், சுற்றிவாங்குதல், உடற்புரிவு என்னுந் தேசிக்குரியகால்கள் இருபத்துநான்கும்; சுற்றுதல், எறிதல், உடைதுதல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், முறுக்கல், அனுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்தரிகைக்கால், கூட்டுதல் எனனும் வடுகிற்குரியகால்கள் பதினொன்கும்; மெய்சாய்த்தல், இடைநெரித்தல், சுழித்தல், அணைத்தல், தூங்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தல் என்னும் உடலவர்த்தனைகள் ஒன்பதும் அகக்கூத்துக்குரிய ஆடல்களாம். புறக்கூத்துக்குரிய ஆடல்களாவன:-பதினோராடலும், பெருநடை சரிமை பிரமரி முதலாயினவுமாம்.

அ. "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்-பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்றாராகலின, பொருளதிகாரத்தினுள் வகுத்துக் கூறிய புறத்திணை ஒழுக்கங்களும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நால்வகை நிலனும் பெரும்பொழுதாறும் சிறுபொழுதாறும், களவு கற்பு என்னுங் கைகோளிரண்டும், பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி தலைமகன் தலைமகள் எனக் களவினுட் கிளவிக்குரியார் அறு

வரும், பார்ப்பார்முதலிய அறுவரோடு பாணன் கூத்தன் விறலி பரத்தை அறிவர் கண்டோர் என நின்ற கற்பினுட் கிளவிக்குரியார் பன்னிருவரும், இயற்கைப்புணர்ச்சி பாங்கற்கூட்டம் இடந்தலைப்பாடு மதியுடம்படுத்தல் இருவருமுள்வழியவன்வரவுணர்தல் முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல் நாணநாட்டம் நடுங்கநாட்டம் மடற்றுறை துறை நயப்புத்துறை சேட்படை பகற்குறி இரவுக்குறி ஒருவழித்தணத்தல் உடன்போக்கு வரைவுமுடுக்கம் வரைபொருட்பிரிவு மணஞ்சிறப்புரைத்தல் கல்வியிற்பிரிவு காவற்பிரிவு பகைதணிவித்தல் உற்றுழிப்பிரிவு பொருட்பிரிவு பரத்தையிற்பிரிதல் என்னும் அகவொழுக்கங்களும் பிறவும் நாடகவழக்குக்கும் ஏற்புடையன.

அரங்கத்திலே புகுந்து நடிக்கின்ற கூத்தற்கு உருவும் உறுப்பும் காரணமும் பயனும் தொழிலும் அமைந்தவாறே, அசித்துப்பிரபஞ்சம் தூலவுருவமாகவும், சித்துப்பிரபஞ்சம் உறுப்புக்களாகவும், இச்சை ஞானக்கிரியைகள் காரணமாகவும், உயிர்கட்கு அறிவினையாக்கிவைத்தல் பயனாகவும், பஞ்சகிருத்தியவிரிவே தொழிலாகவும் அமைந்து நின்று சிதாகாசமாகிய அரங்கத்து நடிக்கும் பரமநாடகனாகிய முதல்வனை மனமொழி மெய்யினாற் சிந்தித்துத் துதித்து வணங்கி இவ்வாராய்ச்சியை முடிக்கின்றாம்.

“ காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல்
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ரூருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே.”

விபுலாநந்தர்.

# மணிமேகலை.

செந்தமிழ்த் தொகுதி 22 பகுதி ஒன்றிலே யான் "மணிமேகலை" யென்று தலைப்பிட்டு விடுத்த பொருளுரை கண்ட, திருவன் K. S. நவநீத கிருஷ்ணபாரதி யென்பார் "மணிமேகலையும் சிலப்பதிகாரமும்" என்ற தலைப்பின்கீழ் அதே தொகுதியிலே 5, 6, 7-ம் பகுதிகளிலே, நான் காட்டிய முடிபுகளுக்கு மறுப்பாகக் கருதிப் பலபட ஆராய்ந்து எழுதியிருக்கின்றார் அது என்னுடைய முடிபுகளை ஒரு சிறிதும் பேதிக்கவில்லையேனும் அவர் புதியனவாகச் சில செய்திகள் குறித்திருப்பதால் அவ்வுரையினை எம்மட்டு வலியுடைத்தென அவர் சென்ற வரிசையே வரிசையாக ஈண்டு ஆராய்ந்து சுருக்கமாகக் குறிக்கின்றேன்.

## I. கண்ணகியம்மை சுவர்க்கமும் செங்குட்டுவன் வழிச்செலவும்.

இத்தலைப்பில், பாரதியவர்கள் குறித்திருப்பன:—"ஆடித்திங்களிற் கண்ணகியம்மையான் மதுரை எரியுண்டது. (பக்.—கஅஎ). ஆடித் திங்களின் ஈற்றுப்பகுதியிலே குன்றக்குறவர்வழியாகக் கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதை அறிந்துகொண்ட செங்குட்டுவன் ஆவணித்திங்களிலே புறப்பட்டிருத்தல்வேண்டும்" (பக். கஅஅ.) என்பனவாம்

ஆடித்திங்களின் எப்பகுதியிலே மதுரை யெரியுண்டது? ஆடித் திங்களின் ஈற்றுப்பகுதியிலே வேடர்களாற் கண்ணகி சுவர்க்கம்புக்கதைச் செங்குட்டுவன் அறிந்தானென்பதால் ஆடித்திங்களின் முற்பகுதியிலேதான் மதுரை யெரியுண்டிருக்கவேண்டும். இச்செய்திகளை அவர் எவ்வாதாரங்கொண்டு குறித்தனரோ? மதுரை யெரியுண்டது ஆடித்திங்களின் ஈற்றுப்பகுதியிலும் செங்குட்டுவனை மறவர் கண்டுரைத்தது ஆவணி நடுப்பகுதியிலும் இருத்தல் கூடாதோ? கூடாதெனின் அக்கூற்றுக்கு ஆதாரமென்னையோ? இவ்வாறு யாதோராதாரமுமில்லாமற் குறிக்கப்படும் செய்திகள் நில்லா.

ஆவணியிலிருந்து முப்பத்திரண்டாந்திங்களாகிய சித்திரை யென்றூர் (பக்.—கஅஅ). அது பங்குனியாவதன்றிச் சித்திரையாவதெப்படி,

## II. மாடலனும் செங்குட்டுவனும்.

மாடலன், "கோவலன் வாள்வாய்ப்பட்டதையும், மதுரையோ டரசு கேடுற்றதையும், கண்ணகியம்மை வஞ்சிசென்று காதலனொடு வானகமருவியதையும், அதனையறிந்த மாதரி அடைக்கலமிழந்தேன் என் றுணர்கொண்டு ஆருயிர்நீத்ததையும் ஒழிவின்றுணர்ந்துகொண்டு தன்பதிப் பெயர்ந்துபோந்து மாசாத்துவான் முதலியோர்க்கு அவற்றை யெல்லா மறிவித்தான்" என்றார் (பக்.–கஅஅ.).

கண்ணகியம்மை வஞ்சிசென்றாள் என்பது பொருந்துவதோ? அவள் நெடுவேள்குன்றம் அடிவைத்தேறி அதன்மிசை கோவலனோடும் வானகமேகினளென்றல்லவோ சிலப்பதிகாரம் கூறுகின்றது.

"அதனையறிந்த மாதரி" என்றார். "வலம்படு தானை மன்னவன் றன்னைச், சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலுந், தாதெரு மன் றத்து மாதரி யெழுந்து, கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தா, னடைக்கல மிழந்தே னிடைக்குல மாக்காள், குடையுங் கோலும் பிழைத்த வோவென, விடையிரு ளியாமத் தெரியகம் புக்கதும்" (சிலப். நீர்ப்படைக்காதை எஉ–எஅ.) என்ற வடிகளை நோக்குக. இவ்வடிக ளால் மாதரி கோவலன் மாண்டதையும் கண்ணகி அரசனை வென்றதை யும் கேட்டு மதுரையிற்பற்றிய எரியகம்புக்காளென்பது போதரும். கண்ணகி விண்ணுறுவதற்குப் பதினன்குநாளைக்குமுன்னாலேயே எரி யகம்புகுந்த மாதரி கண்ணகி விண்ணுற்றதைக் கேட்டாளென்பது பொருந்துமா. இது, பின் "இருபெருநூலின் நிகழ்ச்சிக்குரிய கால வட்டவணை"என்று முடிவிற்குறிக்கும்போது இவர் மாதரிசாவுக்குப்பின் கண்ணகி சுவர்க்கம்புக்கதென்று குறித்ததனொடு மாறுபடாதா?

'கண்ணகியம்மை..........,வானகமருவியதையும்..........உணர்ந்து கொண்டு (மாடலன்) தன்பதிப்பெயர்ந்து' என்றும், "இவன்........ கண்ணகி கோவலன் சுவர்க்கம்புக்கதை மாசாத்துவான் முதலியோருக்கு உணர்த்தியிருத்தல்வேண்டும்" என்றும் குறித்துவிட்டு, மேலும் ஈற்றி லுள்ள காலவட்டவணையிற் கண்ணகி சுவர்க்கம்புக்கதன்பின் மாடலன் புகாருக்குப் புறப்பட்டானென்றும், கோவலன் கண்ணகி யென்பவர் கள் சுவர்க்கம்புக்கதைக்கேட்ட மாசாத்துவானும் மாநாய்கனும் துறவு

பூண்டனரென்றும் எழுதியிருக்கின்றார் (பக்.—க௮௮—க௮௬). இச் செய்திகளையும் இவர் யாண்டுக் கண்டனரோ? "மதுரை எரிவாய்ப்பட்டதும் மாதரி எரியகம்புக்கதும் கவுந்தி உண்ணாநோன்போ டுயிர்பதிப் பெயர்ந்ததும் பொற்றேர்ச்செழியன் மதுரைமாநகர்க் குற்றதுமெல்லா மொழிவின்றுணர்ந்தாங் கென்பதிப்பெயர்ந்தேன்" என்று மாடலன் தான் கண்டுவந்தவெல்லாம் விவரமாகக்கூறியிருக்கவும் பாரதியார் அவன் காணாதனையும் கண்டதாகக்கூறுவதேனோ? கண்ணகி வானகமேகியதை மாடலன் உணர்ந்துவந்து புகாரிற் சொல்லவில்லையென்பதற்கு, "கண்ணகிதன் கண்ணீர்கண்டு மண்ணரசர்பெருந்தோன்றல் (நெடுஞ்செழியன்) உண்ணீரற் றுயிரிழந்தமை மாமறையோன் வாய்க்கேட்டு மாசாத்துவான் றுன் றுறப்பவும், மனைக்கிழத்தி உயிரிழப்பவும், எனைப்பெருந்துன்ப மெய்திக் காவற்பெண்டும் அடித்தோழியும் கடவுட்சாத்தனுடனுறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமாநகர் புகுந்தன" ரென்பதே தகுந்த சான்றுமன்றோ? பாரதியார் குறித்தபடி ஆடிமாதம் ஈற்றுப்பகுதியிலே கண்ணகி வானகமெய்தியசெய்தி மதுரைக்கெட்டுவதற்குக் குறைந்தது பதினொன்கு நாளாவது செல்லும். ஏனென்றால், கண்ணகியாள் மதுரையிலிருந்து இரவும் பகலும் இடைவிடாமல் ஓரிடத்தும் இருக்காமலும் நிற்காமலும் நடந்துசென்றுமே நெடுவேள்குன்றம் அடிவைத்தேற எழுநாளிரட்டி சென்றதாக, அப்படியே ஒருவன் நடந்து மதுரைவந்துசொன்னாலும் பதினான்காம் நாளிலேயே சொல்லியிருக்கவேண்டும் அதாவது ஆவணி நடுப்பகுதியிலாம். இதனால் மாடலன் ஆடியிலேயே நீங்கினனென்பது தவறும். "மதுரையகன்று புகாரடைவதற்கு இரண்டுதிங்கள்வேண்டுமாதலின்" என அவரே குறிப்பதால் ஆவணி நடுப்பகுதியில் மதுரையகன்ற மாடலன் புரட்டாசியிற் புகாரடைதலும் இயலாததாம்.

"கோவலன்றாதையு[ம்] [க]ண்ணகியம்மைதாதையும் மைந்தற்குற்றதையும், மடந்தைக்குற்ற[தை]யுங் கேட்டுக் கொடுந்துயரெய்திப் பிக்ஷுக்களின்பள்ளியை அடைந்[து] [து]றவுபூண்டனர்" என்று குறித்தார் (பக்—க௮௮). இவர்கள் துறவுபூணுதற்கு மைந்தற்குற்றதும் மடந்தைக் குற்றதும் கேட்டல்மட்டுமேயல்லாமல் முக்கியமானகாரணமாயிருந்தது பாண்டியன் நெடுஞ்செழியன் மாண்டதே. இச்செய்தி, "மைந்தற்குற்ற

தும் மடந்தைக்குற்றதும், செங்கோல்வேந்தற் குற்றதுங்கேட்டு" (சிலப் நீர்ப்படை 88—89) எனவும், "கோவலன்றன் வினையுருத்துக் குறுமக ளாற் கொலையுண்ணச், காவலன்ற னிடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர் கண்டு, மண்ணரசர் பெருந்தோன்ற லுண்ணீரற் றுயிரிழந்தமை, மாமறை யோன் வாய்க்கேட்டு மாசாத்துவான் றுன் றுறப்பவும்" (வாழ்த்துக்காதை உரைப்பாட்டு) எனவும், "கோவலன் றன்னைக் குறுமகன் கோளிழைப்பக், காவலன் றன்னுயிர் நீத்தது தான் கேட்டேங்கிச், சாவது தான் வாழ் வென்று தானம் பலசெய்து, மாசாத்து வான்றுறவுங் கேட்டாயோ வன்னை" (வாழ்த்துக்காதை—காவற்பெண்டரற்று) எனவும் வருவனவற் றால் விளங்கும்.

பாரதியார், "இருபது பிராயத்திற்குக் குறைவில்லாதவர்கள் காவ ராடையை உடுத்துக்கொண்டு தலைமுழுவதையும் முகமுழுவதையும் சிறைத்துக்கொண்டு நேராகவே ஸங்யாஸத்தை அடையலாம். பெண் பாலர் இரண்டுவருஷகாலம் பஞ்சசீலம், அகாலபோஜனத்தியாகம் ஆகிய ஆறுதருமங்களையும் கைக்கொண்டொழுகியபின்புதான் தமக்கு ஸங்யா ஸத்தைத்தரும்படி ஸங்கத்தின் உபயபாகத்தாரையும் வேண்டிக்கொள்ள லாம் என்னும் விதி" என்று குறித்தனர் (பக்-கஅகூ). இவ்விதிகள் எங்கே காணப்படுகின்றனவென்று அவர் குறித்திலர். ஏனோ? இவ்விதிகளை யுணர்த்தச் சிலப்பதிகாரத்தில் யாதோராதாரமு மில்லை. பௌத்தசமயக் கொள்கைகளை விளக்கவந்த மணிமேகலையிலாவது இவ்விதிகளை ஊகித் துணர்தற்கேனும் ஏதுவுண்டோ? இல்லையே. இவர் இவ்விடத்துக் குறித்த மணிமேகலை (II 58-69) அடிகள், "மாதவி மாதவர்பள்ளி புகுந்து அறவணவடிகளிடம் கோவலற்குற்ற தீமையைத் தெரிவிக்க அவர் பிறவித்துன்பம் பற்றினால்வருவது, பேரின்பம் பற்றறுதலால் (துறவால்) வருவது என்று கூறித் துறவொழுக்கத்தை எடுத்துக் காட்டி இதைக் கைக்கொள்ளென்றனர்" என்றுதானே பொருள்தரும். இதனால் இவர் குறித்த விதி வலிபெறுமாறெங்ஙன்? இவர் 'சிலப்பதி காரம் நீர்ப்படைக்காதை 52-ம் வரிமுதலாகியவற்றை நோக்குக' (பக்-கஅகூ) என் றெழுதினரேயொழிய அந்நோக்கால்வரும் பயன் இது வெனவும் அது தம் குறிப்பை இவ்விதமாக நிலைபெறச்செய்யுமெனவும் ஏனோ எழுதிலர்? பாரதியார் இவ்விதிகளுக் காதாரம் சிலப்பதிகாரத்திற் காட்டுதல்வேண்டும். இன்றேல் இரண்டாந்தரமாக மணிமேகலையிலாவது

காட்டுதல்வேண்டும். இவ்விரண்டு நூல்களினும் இவ்விதிகளுக்கு ஆதார மின்மை பலரும் அறிவர். ஆதலின் இவ்விதிகள்கொண்டு குறிப்பன வெல்லாம் பொருந்துவனவாகா.

"இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு இருபத்தாறு திங்கள் கழிந்தன. இது புரட்டாசித் திங்களாகும்" என்றார் (பக்-கக௦). 'ஆடித் திங்கள் ஈற்றிலே கண்ணகி விண்ணுலகுற்றாள்' என்ற அவர், அதி லிருந்து 26-திங்கள் கழிந்தனவென்றால், புரட்டாசி ஈற்றுப்பகுதியும் கழிந்தது, இது ஐப்பசித்திங்களாகும் எனறல்லவோ குறித்தல் வேண்டும்.

"இக்கொள்கையைச் சுருக்கமும், மாடலனுக்குப் பௌத்தமதத் தின்மேல் இயல்பாயமைந்த வெறுப்பும், அவளது கூந்தற்கழிவிற் கிரக்க மும், பிறவும் கருதி மாடலன்கூற்றாகப் பின்வருமாறு சிலப்பதிகாரம் கூறும்" என்றார் (பக்-கக௦).

இக்கொள்கையைச் சுருக்கமும் என்றதில் எக்கொள்கையை எவ் வாறு சுருக்கமாகக்கூறும் என்று விளக்கவேண்டியதிருக்க அதைவிடுத்து எழுதுவதால் யாதுபயன்? கொள்கை எது; அதை விளக்கும் அடிகள் எவை? மாடலனுக்குப் பௌத்தமதத்தின்மேல் இயல்பாக வெறுப்பு ஏற்பட்டிருந்ததென அவர் தாம் எடுத்துக்காட்டிய அடிகளால் (சிலப். XXVII 103-108) விளக்கமுடியுமா? "அவளது கூந்தற்கழிவிற் கிரக்க மும் பிறவும்" என்றார். இரக்கம் மாடலனுக்கா? நூலாசிரியருக்கா? இரக்கத்திற்குக் காரணமென்னே? பிறவும் என்றதன் விவரமென்னேயோ;

"பிள்ளையவர்கள் இவ்வடிகளை ஆதாரமாகக் கொண்டு கோவலன் கண்ணகியம்மை என்பவர்கள் சுவர்க்கம்புக்கதை மாடலனுலறிந்த பொழுதே மாதவி குழல்களைந்து துறவுபூண்டாள் என்று கூறுகின்ற னர்" என்றார் (பக்-கக௦). இவ்விதமாக நான் எவ்விடத்துக் குறித்தேன் என அவர் எடுத்துக்காட்டவேண்டும். கோவலன் மாண்டதைக்கேட்டே மாதவி துறவுபூண்டாள். மணிமேகலைகூட இவ்வாறுதான் கூறும் (மணி. II, 58-63).

"என்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி
னன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்" (சிலப். XXVII 109-110)

என்ற அடிகளால் நான் சொல்லிய செய்திகேட்டுச் சிலர் இறந்தனராதலின் நான் கங்கையாடப்போந்தேனென்பது தான் போதருமேயன்றி மாசாத்துவானும் மாநாய்கனும் மாதவியும் துறவுபூண்டதற்கும் மாதவி குழல் களைந்ததற்கும் தானே காரணனானமைபற்றிக் கங்கையாடப்போந்தனனென்பது போதராது. அறத்திற்சிறந்த துறவற மேற்கொண்டனர் சிலர் என்பதுபற்றியும் யாரோ ஒரு நாடகக்கணிகை மயிர்களைந்தாளென்பதுபற்றியும் இரங்கிப் பலநூலுமோதியுணர்ந்த பெருந்திருவாளனாகிய மாடலமறையோன் கங்கையாடப்போந்தானென்பது நகைக்கேயிடமாமன்றோ? உன் வைப்பாளன் இறந்தானென்ன ஒருவன் சொல்லக்கேட்ட ஓர் கணிகை கூந்தல்களைந்தமையால் அச்செய்திசொன்னவனுக்குப் பாவம்வந்ததென்பது கேட்போருக்கு விந்தையாகவே உளது. இந்நீதி எந்நூலிலுளதோ? மாதவி குழல்களைந்ததால் யாருக்குக் கேடு என்றால் அவள்நற்றாய் சித்திராபதிக்கே. மணிமேகலைப்படி அவளே மாதவியாற் பொருள்வருவாயின்றாயிற்றே என இரங்குபவளாவள். ஒழுக்கத்திற் சிறந்த மாடலமறையோனுக்கு இதனால் ஆன கேடென்னே?

"மாதவி குழல்களைந்தமை கேட்டவுடனே இவனுக்கு ஆறாத்துயரம் வந்திருத்தல்வேண்டும்" என்றார் (பக்-கஈக). மாதவி நாடகக்கணிகையாயிருந்தும் தன்காதலன் இறந்தமைகேட்டுப் பரத்தமைத்தொழில் விடுத்து உத்தமிபோற் குழல்களைந்து துறவியானாள் என்பது கேட்டு மாடலன் பெருமகிழ்வெய்தி அவளுடைய உயர்ந்தஒழுக்கத்தைப் பாராட்டியிருப்பானேயொழிய வருந்தியிருப்பானென்பது அறிஞர்க்கு ஒப்பமுடியாததொரு செய்தியாவதோடு அவ்வந்தணனுடைய பேரறிவுக்கும் சீலத்துக்கும் ஓரிழுக்குக்கூறியதுமாகும். "மாதவிதுறந்ததற்கு அடுத்த திங்களாகிய ஐப்பசியே இவன் (மாடலன்) புகாரைவிட்டுப் புறப்பாடுற்றதுவாகும்." என்றார் (பக்-கஈக). கோவலனிறந்ததும் கண்ணகி துன்புற்றதும் பாண்டியன் உயிர்விட்டதும் கேட்ட மாசாத்துவானும் மாநாய்கனும் துறவெய்தினர், அவர்தம் மனைவியர் தம்மக்கள் செய்திகேட்டு உயிர்நீத்தனர்; கோவலன்செய்திகேட்டு மாதவி துறவெய்தினள்; என மேலே விவரித்திருக்கிறோம் இதனால் மாதவி துறவெய்தியது மதுரை யெரிந்த இரண்டுதிங்களின்பின்னால் என்பதாம். தன்வாய்க் கேட்டோரிறந்தோருண்மையின் உடனே மாடலன் புகார்நீங்கிப் பல தலங்களையும் சென்று வணங்கிக் கங்கையையும் அடைந்தான்.

கணியெழுந்து நாம் வஞ்சியினீங்கி எண்ணான்குமதியமாம் என்று கூறுகிறான். இதனால், சேரன் வஞ்சிநீங்கி மாடலனோடு கங்கைக்கரையிற் பேசிய அன்றோடு 32 திங்களாம் என அறியலாம். இதனை ஓராது "இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு முப்பத்திரண்டுதிங்கள் கழிந்தன" எனக் குறித்துவிட்டு (பக்-கககூ, பாரதியவர்கள், ஈற்றிலுள்ள காலஅட்டவணையில் ஆடித்திங்களிற் கண்ணகி சுவர்க்கம்புக்காள், ஆவணித்திங்களிற் சேரன வஞ்சியைவிட்டு இமயநோக்கிப் புறப்பட்டான் என்றும், III செங்குட்டுவன வஞ்சிசேர்தல் என்ற தலைப்பினகீழ்க் கண்ணகியம்மைசுவர்க்கம்புக்கு முப்பத்துநான்காந்திங்களும் செங்குட்டுவன் வஞ்சிநீங்கிய முப்பத்துமூன்றாந்திங்களுமாகிய வைகாசி" எனறும், எழுதினார் (பக். கரு௨). இதனால் இவ்விரண்டாந்தலைப்பிற் பாரதியவர்கள் குறித்த செய்திகளெல்லாம் வலியற்றொழிந்தமை காண்க.

## III. செங்குட்டுவன் வஞ்சிசேர்தல்.

"பகைவரைவெல்லுதல் படிமக்கல்லெடுத்தல்முதலாகிய காரணங்களானே கங்கைக்கரைசார்தற்கு எண்ணாறுதிங்கள் சென்றனவேனும், வஞ்சியைநீங்கி நாள்பலவாயினமையானும், ஆண்டிருந்துவந்தபொழுதே நட்பரசரிடங்களிலே தங்கிவந்தமையானும் கண்ணகியம்மையைப் பிரதிஷ்டைசெய்த பின் ஊக்கம்நனிபடைத்திட்டமையானும், இன்னபிறவாற்றானும் அவன் வஞ்சியை அடைதற்கு இருபது திங்களே போதியவாகும்" என்று குறித்தார் (பக். ககூ௨).

பகைவரைவெல்லுதல் 18 நாழிகையிலேயே ஆயிற்று, அதனால் இதை மதி பல சென்றதற்குக் காரணமாகக்காட்டியது பொருந்தாது. படிமக்கல்லெடுத்தல் கங்கைக்கரைசார்ந்து அதனைக் கடந்து கனகவிசயரைப் போர்வென்றபின்னரே நிகழ்ந்தது என்பதையும், சேரன் தானே இமயஞ்சென்றிலன் கங்கக்கரையிலேயே இருந்தானென்பதையும், கல்லைக் கங்கையாற்றில் நீர்ப்படைசெய்தஅன்றே எண்ணான்குமதியமாம் என்பதையும் நன்கு மனத்திலமைத்தல்வேண்டும். நட்பரசரிடங்களிலே சேரன் தங்கிவந்தனனெனக்குறித்ததற்கு ஆதாரம்வேண்டும். அவன் வழியில் நீலகிரியில்மட்டுமே அரசர்களனுப்பியதிறையையேற்றுத் தங்கியிருந்தனனென நூல் கூறுகின்றது. மேலும் அவர் 'இன்ன பிறவாற்றானு' மென்றார்; அவை யாவையோ?

திரும்பும்போது "கண்ணகியம்மையைப் பிரதிஷ்டைசெய்தலில் ஊக்கம் தனிபடைத்திட்டான" எனறமையால், சேரனுக்கு அதன்முன் பிரதிஷ்டையில் ஊக்கம் தனியில்லை என்பதாகின்றது. இது பொருந்தா வுரையாவதோடு சேரர்பெருமான தளராஊக்கத்திற் கோர் இழுக்குக்கூறியதுமாம். மேலும் பல்லாயிரங்காவததூரம் நடந்து போர்புரிந்து தானும் கூடவந்த வீரரும் ஊர்திகளும உடறறளர்ச்சியடைந்திருகக, வந்தவேகத்தினும் அதிகவேகத்தோடும் மீண்டனனென்பது எவ்வாறு பொருந்தும்? அக்காலத்துப் புகைவண்டி இருநததாகத் தெரியவில்லையே; ஆதலின் ஊருக்கு விரைவில்திரும்பவேண்டுமெனற ஆசைகொண்டிருந்தானேனும் அவன் திரும்புதற்குக் குறைந்தது சென்றகாலமாவது ஆகும் எனக் கொள்வதே பொருத்தமாகும். மதுரை எரியுண்டதுமுதல் கண்ணகி பிரதிஷ்டைவரையுள்ள நிகழ்ச்சிகளின விவரத்தை நான் கடைச்சங்க கால மெனத் தலைப்பிட்டு எழுதிய பொருளுரையில் நூல்கூறுமாறு பாக்கக் காண்க (செந்தமிழ் 17-ம் தொகுதி). சேரன் வஞ்சியிலிருந்து கங்கைக்கரைசேரவும் மீளவும சென்றன தனித்தனி 20½ மாதங்களாம்.

"கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க முப்பத்துநான்காந் திங்களும், செங்குட்டுவன் வஞ்சிநீங்கிய முப்பததுமூன்றாந்திங்களுமாகிய வைகாசித் திங்களிலே" என்றார் (பக். ௧௬௨. செங்குட்டுவன் வஞ்சிநீங்கியது ஆவணியிலா மெனக் குறித்தவர் அதிலிருந்து முப்பத்துமூன்றாந்திங்களாவது சித்திரையென்னுமல் வைகாசித்திங்களென்றது பொருந்துவதா?

(தொடரும்)

இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

---

# கம்பர் கவி நயம்.

" இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம் "

என்பது இராமாயணத்திற் பாலகாண்டத்துள்ள சரயுவென்னும் ஆற்றினது பெருமையைக்குறித்துச் சொல்லும் பாசுரமாகும். இனி யிதனிற் பொதிந்துள்ள பல்வகை நயங்களையு மாராய்வாம்.

சூரியகுலத்துதித்த எல்லையற்ற பலவாகிய அரசர்களது யாவராலும் புகழ்ந்து கூறுதற்குரிய நல்லொழுக்கங்களுக்கேற்பத் தானு மவற்றை மேற்கொண்டதாகிய சரயு வென்று எவராலு முயர்த்துக்கூறப்படும் நதியானது, வலிமைபொருந்திய கடலாற்சூழப்பட்ட இவ்வுலகத்தே செழித்தோங்குதற்குரிய ஜீவராசிகளுக்கெல்லாம் (காத்தளிக்குந்தன்மையில் அன்னையினது சுரந் தமுதூட்டும் கொங்கைகளை நிகர்ப்பதாம் என்பது இதன் பொழிப்புரையாகும்.

வேந்தரது சீரியகுணங்களைப்போல் தானு மவ்வொழுக்கங்களைக் கொண்டுளதென்றும், மன்னுயிரைப் பாதுகாக்குந் தன்மையிற் றாயை நிகர்த்துப் பெருமையுற்றிருக்கின்றதென்றும் புனைந்துரைக்கப்பட்டதிலடங்கியுள்ள செம்பொருள்களை விரித்தெழுதுவாம்.

கொடை யளி செங்கோல் குடியோம்பல் இந்நான்கும் அரசர்க்கின்றியமையாதனவாகிய நான்கு சிறந்த குணங்களாம். இதனைக் "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும், உடையானும் வேந்தர்க் கொளி" என்னுந் தமிழ்மறையா னுணர்க. மற்றுத் தன்னிடத்துள்ள குற்றங்களை யறவே நீக்கிக்கொண்டு பிறரிடத்துள்ள குற்றங்களை யொருவன் ஆராய்வானாயின் அம்மன்னவனுக்கு வரக்கடவதாகிய குற்றம் வேறென்னுளது? ஒன்று மின்றாம். இதனைத், 'தன்குற்ற நீக்கிப் பிறர் குற்றங் காண்கிற்பின், என்குற்ற மாகு மிறைக்கு' என்னும் பொய்யா

மொழியா னுணர்க. இன்னும் வாய்மை, யாவருந் தன்னைப் பற்றுக் கோடாகக் கொள்ளுதற்குரிய களைகணும் பான்மை யாதியனவும் வேந்தர்க் குரிய விழுமிய குணங்களாம். இனி இப்பண்புகள் ஆற்றினிட முள வேயோ என்பதையு நோக்குவாம், 'அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந் தக்காற், றெற்றெனத் தெண்ணீர் படும்' என்று சான்றோர் கூறியபடி, மறவாக்கொடையும் இயல்பிலேயே தண்ணியதாந்தன்மையோடு மன் னுயிர்களைத் தவறுமற் காக்குந் தண்ணளியுடைமையும், யாவற்றினுந் தன்னை யின்றியமையாத் தலைமைத்தன்மையும் உலகுயிர்களைத் தான் பாய்ந்து விளையுளாதியவற்றாற் பாதுகாக்குந் தன்மையும் ஆற்றினிடத் துளவாதல் காண்க. தான் புனிதமாயிருந்துகொண்டு தன்னில் மூழ்கி யவரது மாசுபோக்கித் தூய்மைபுரிவதும் என்று மாறாது லகிற் பெருகி யோடுவதாகிய வாய்மையைக் கொண்டிருப்பதும் அதனு வியாவர்க்கும் பற்றுக் கோடாயிருப்பது மிதனிடத்துக் காணற்பாலனவாம். எனவே வேந்தரது பெருங்குணங்களை இஃ துடையதாயிருத்தல், ஈண்டுக் கவனிக்கற்பாலதாம். வேந்தர்மாட் டொழுக்கங்களைப்போல், தா னிவ் வுலகத்துப் பெருமைபாக நிறைந்தொழுகிப் பெருகியோடுவதை யிதற் குவமமாகக் கொள்வது பொதுப்பான்மையதாம். தாய் தான் பசித்திருப் பினும் தன்மக்களதரும்பசியைக் காணச் சகியாது தன்னுவியன்றவளையி லவாது பசியைப்போக்க முயன்று அதனைத் தீர்த்து மகிழ்தல்போலவே, என்றும் வற்றுச் சரயுவும் இவ்வுலகத்து மன்னிய உயிர்களது பசியைப் போக்கிப் போஷிக்குந் திறத்திற் சிறந்த உவமையாதல் பொருத்தமான தொன்றும். இக்கருத்துப்போலவே புறநானூற்றிலும்,

> 'புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
> சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்
> மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன் '

என ஓர் புலவர் சோழமன்னனைப் புகழ்ந்துரைத்திருப்பதனை நன்கு காணலாம். தான் தளர்ந்தவிடத்தும் உலகையுபகரிக்கும் ஒப்புரவாங்

---

* ஈன்றணிமைபொருந்தி அது தீர்ந்த குழவிக்குச் சுரக்கு முலைபோல, நீர் மிக்க காவிரியினது கரைமரத்தைச் சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப் பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழநாட்டையுடைய வேந்தன் (புறப்பாட்டுப் பழையவுரை).

தன்மையை இவ்வுவமைமுகத்தாற் பாலியாற்றினிடத் தமைத்துத் தெய்வப்புலமைச் சேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர்புராணத்திற் கூறியிருக்குந்திறமும் ஈண் டாராய்தற் கவசியமாகலின் அச்சிறந்த பாசுரத்தையு மெழுதுவாம். அது,

‘பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி’

என்னும் பாசுரமேயாம்.

†‘எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய! முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலின் நின்னொன் றுமொழிவல்
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்பு மதி
யளிதோ தானேயது பெறலருங் குரைத்தே’

எனக் காவலாது பரிபாலனத்தன்மையைக் ‘குழவிகொள்பவரினோம்புமதி’ எனப் பாராட்டிக் கூறியிருத்தலும், அது சிற்சிலர்க்கேயன்றி ஏனைய ரெல்லார்க்கும் பொருந்துதல் மிக வரிதாமெனநுவலப்பட்டிருத்தலும்

† “எருமைபோலும் வடிவையுடைய கரிய கற்பொருந்திய இடந்தோறும் பெற்றம்போலப் பரக்கும் யானையையுடையவாய் வலியையுடைய காட்டிற் குள்ளாகிய நாட்டினையுடையாய்! பெரும: நீ இங்ஙனம் பகைவரான் அணுகப் படாத இயல்பாகிய பெருஞ்செல்வத்தையுடையனாதலால் நினக்கு ஒருகாரியஞ் சொல்லுவேன், அதனைக் கேட்பாயாக. அருளையும் அன்பையும் நீக்கிப் பாவஞ் செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கிடமாகக் கொள்பவரொடு பொருந்தாது, நீ காக்கப்படுந்தேயத்தைக் குழவியை வளர்ப்பாரைப்போலப் பாதுகாப்பாயாக. அளிக்கத்தக்கதொன்று அக்காவல், அது பெறுதற்கரிது.” (புறப்பாட்டுப் பழையவுரை).

நோக்கத்தக்கனவாம். எனவே அரசனும் ஆறுந் தத்தங் குடிகளைப் புரக்குந்தன்மையிற் சிறுமகார்களைக் காக்கும் அன்னையரைப்போன்றிருக் கும்பான்மை யீண்டு வருணிக்கப்பட்டமை சாலவும் இன்பம் பயத்தற் குரியதாம். "ஆருயிரின் றாயே அறத்தின் பெருந்தவமே, பொருளின் கண்ணே பெருமானே" எனப் புகழேந்தியார் நளவேந்தனை முதற்கண் 'ஆருயிரின்றாயே' எனப் புகன்றுள்ளமை காண்க. பிற புலவர்பெருமக்க ளும் புவியரசர்பெருந்தகையார்களைப் போற்றுமிடந்தோறும் இங்ஙனமே கூறுவதும் அறியற்பாலது. 'குடிகளைப் பேணுந்திறத்தி லிம்மட்டோடு நில்லாது தம்முயிர்போலவுங் கருதிப் புரந்தளித்திடுதலும் வேந்தர்க் கியல்பேயாம். 'தன்னுயி ராமென வுலகிற் றங்கிய, மன்னுயிரனைத்தை யும் புரக்கு மாட்சியான்' என நளன தரசியலை யதிவீரராமபாண்டியனார் புனைந்துள்ளமையும், 'நெல்லு முயிரன்றே நீருமுயிரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்' எனப் புறப்பாட்டி லோரிடத் தோர் புலவர் அரசனை யுயிராகவே கிளந்துரைத்தமையுங் கவனிக்கற்பாலன. 'மன்ன னுயிர்த்தென்ற கருத்து உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவா, வது மன்னன் முறைசெய்து காப்பினென்றதாம்' என்னும் அப்புறப் பாட்டின் பழையவுரையும் நம்மனத்திற்குப் பெருவகைவிளைத்தல் காண்க.

இங்ஙனம்,

பண்டிதர். ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
முனிசிபல் கலாசாலை, சேலம்.

# சின்னமனூர் ராஜசிங்கன் சாசனம்

பாண்டியவம்சத்தின் சரித்திரத்தைப் பற்றிய விஷயங்களுக்கு ஆதாரமானவை, சென்னைபட்டணம் காட்சிச்சாலைச்செப்பேடொன்று, வேள்விக்குடிச்செப்பேடொன்று, சின்னமனூர்த் தாம்ரசாசனங்களிரண்டு ஆகிய இந்நான்கே. இவைகளிற் குறித்துள்ள அரியசெய்திகளை யடிப்படையாகக்கொண்டும், ஆனைமலை நரசிங்கப்பெருமான் குடைகோயிலிற் கண்டெடுக்கப்பட்ட பாண்டியஅரசன் சடையன்பராந்தகனின் (கலி 3871-ம் வருஷத்ததான) கல்வெட்டையும், ஐவர்மலையில் வரகுணவர்மனின் எட்டாமாண்டாகிய சகாப்தம் 792-ம் வருஷத்துக் கல்வெட்டையும் கொண்டும், 7 முதல் 10-ம் நூற்றாண்டுவரை அரசாண்ட பாண்டியர்களுடைய வம்சாவளியானது ஒருவாறு தொகுக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறித்த செப்பேடுகள் நான்கினுள், காட்சிச்சாலைச் செப்பேட்டின் பிரதி, 'இந்தியன் ஆன்டிக்வரி' யிலிருந்து காலஞ்சென்ற து. அ. கோபிநாதராவ் அவர்களாற் செந்தமிழில் முன்னமே பெயர்த்தெழுதப்பட்டிருக்கிறது. வேள்விக்குடிச் செப்பேட்டை பங்களூர் 'மிதிக் சொசைடி' பத்திரிகையிலும் செந்தமிழிலும் (தொகுதி 20 பக். உ0ரு—உகசு) மகா-a-a-ஸ்ரீ கே. ஜி. சங்கரையரவர்கள் வெளியிட்டுள்ளார்கள். எஞ்சிய சின்னமனூர்ச் சாசனங்களிரண்டும் இதுகாறும் வெளிவரவில்லையெனினும், அவைகளிலுள்ள சரித்திரக்குறிப்புகள் முழுவதும் சென்னைச் சிலாசாசனபரிசோதகரின் அறிக்கைகளில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

காலஞ்சென்ற கோபிநாதராவ் அவர்கள் கையெழுத்தில், சின்னமனூர்ப் பெரியசாசனத்தின் பகர்ப்பொன்று எனக்குக் கிடைத்தபடியால், பாண்டியசரித்திரத்தைக் குறித்து ஆராய ஊக்கமுடையவர்களுக்கு உபயோகமாயிருக்குமென்றெண்ணி அதைச் செந்தமிழ்வாயிலாக வெளிப்படுத்தியுள்ளேன். செப்பேட்டை நேரிற் பார்த்தெழுத இயலாதபடி

யால் இந்தப் பகர்ப்பிற் கண்ட சிற்சில பிழைகளை இயன்றவரை திருத்தியும், விளங்காதவைகளைக் கண்டவாறே வரைந்தும், புள்ளிகளிட்டுக் காட்டியும், வெளியிட்டுள்ளேன். சிற்சில பதங்களைத் திருத்த என் நண்பர் மகா-ள-ள-ஸ்ரீ தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் அன்போடு உதவி புரிந்தார்.

ஸ்வஸ்திஸ்ரீ:—

*திருவொடுந் தெள்ளமிர்தத்தொடுஞ்
செங்கதிரொளிக்கௌஸ்துபத்தொடும்
அருவி மதகளிற்றொன்றொடுந் தோன்றி
அரனவிர்சடை முடிவீற் றிருந்த
வெண்டிங்கள் முதலாக வெளிப்பட்டது
நாற்றிசையோர் புகழ்தர நானிலத்தி னிலைபெற்றது
பாரத்வாஜாதிகளால் ஸ்துதிக்கப்பட்டது
விரவலர்க்கரியது
மீனத்வயசாஸனத்தது
பொருவருஞ்சீர் அகத்தியனை புரோஹிதனைப்பெற்றது
ஊழிலூழிதோறுமுள்ளது
நின்ற ஒருவனை உடையது
வாழியர் பாண்டியர் திருக்குலமிததனில் வந்துந்தோன்றி
வானவெல்லை வளைத்தாண்டும் வேலைகடல்கடைந் தமிர்துகொண்டுந்
நானிலத்தோர் விஸ்மயப்பட நாற்கடலொரு பகலாடிஉம்
மங்குலாளி மணிமுடிஒடு சங்கவெள்வளைத் தரித்தும்
நிலவுலகம் வலஞ்செய்தும் நிகரில் வென்றி அமரர்க்குப்
பலமுறைஉந் தூதுய்த்தும் பாகசாஸந ஞரம்வவ்விஉஞ்

*இச்சாஸனத்துள் இடையிடையே பயின்றுள்ள வடமொழியெழுத்துக்கள், தமிழெழுத்துக்களாகவே காட்டப்பட்டுள்ளன. சந்தர்ப்பத்திற்கேற்பச் சரியான வடமொழிச்சொற்களை ஊகித்துக்கொள்க.

செம்மணிப் பூணொடு தோன்றித் தென்றமிழின் கரைகண்டும்
வெம்புனைவேலொன்றுவிட்டு விரைவதனிற் கடல்மீட்டும்
பூழியனெனப் பெயரெய்திஉம் போர்க்குன் றுயிரம்வீசிஉம்
†பாழியம்பாயலி னிமிர்ந்தும் பஞ்சவனெனப் பெயர்நிறீஉம்
வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
உளமிக்க மதி அதனு லொண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா னாய்ந்து பண்டிதரில் மேந்தோன்றிஉம்
மாரதர்மலை களத்தவியப் பாரதத்திற் பகடோட்டிஉம்
விஜயனை வஸுசாபநீக்கிஉம் வேந்தழியச் சுரம்போக்கிஉம்
வசையில்மாக் கயல்புலிசிலை வடவரைநெற்றிஇல் வரைந்துந்
தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பலதிருத்திஉம்
அடும்பசிநோய் நாடகற்றி அம்பொற் சித்ரமுயரிலுந்
தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்
மஹாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்
மஹாராஜரும் ஸார்வபௌமரும் மஹீமண்டலங் காத்துகந்தபின்
வில்லவரும் நெல்வேலிஉம் விரிபொழிற் சங்கரமங்கைப்
பல்லவரும் பிங்கண்ட பராங்குசன் பஞ்சவர்தோன்றலும்
மற்றவற்கு பௌத்ரனாயின மன்னபிரா னிராசசிங்கனுங்
கொற்றவர்க டொழுகழற்காற் கோவரகுண மஹாராஜனும்
ஆங்கவற் காத்மஜனாகி அவனிதலம் பொறைதாங்கித்
தேங்கமழ்பொழிற் குண்ணூரிலுஞ் சிங்களத்தும் விழிஞத்தும்
வாடாத வாகைசூடிக் கோடாத செங்கோனடப்பக்
கொங்கலர் பொழிற் குடமூக்கிற் போர்குறித்து
வந்தெதிர்ந்த கங்கபல்லவ சோளகாலிங்க மாகதாதிகள்

† 'பாழியம் பாயலி னிவர்ந்தும் பஞ்சவனெனப் பெயர்நிறீஇயும்' எனவு மிருக்கலாம்.

குருதிப்பெரும் புனற்குளிப்பக் கூர்வெங்கணை தொடைநெகிழ்த்
பருதிஆற்ற லொடுவிளங்கின பராசக்கிர கோலாகலனுந் [துப்
குரைகழற்கா லரைசிறைஞ்சத் துவலயதலந் தனதாக்கின
வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மனும்
மற்றவனுக் கிளையனான மனுசரிதன் வரட்சடையன்
பொற்றடம்பூண் சிரீபராந்தகன் புனைமணிப்பொன் முடிசூடிக்
கைந்நிலந்தோய் கரிகுலமும் வாசிவ்ருந்தமுங் காலாளும்
செந்நிலத்தி னிலஞ்சேரத் திண்சிலைவாய்க் கணைசிதறிஉம்
கரகிரியிற் கருதாதவராயர் கரிகுல நிரைவாரிஉம்
நிலம்பேர நிகர்கடந்துந் நெடும்பெண்ணை கடமழித்தும்
ஆலும்போர்ப் பரிலென்று லகன் கொங்கி லமர்கடந்தும்
தேவதானம் பலசெய்தும் ப்ரஹ்மதேயம் பலதிருத்திஉம்
நாவலந்தீ வடிப்படுத்த நரபதியும் வானடைந்தபின்
வானவன்மஹா தேவிஎன்னு மலர்மடந்தை முன்பயந்த
மீனவர்கோ னிராசசிங்கன் விகடபாடவ னவனேய்
அஹிபதி ஆயிரந்தலைபா லரிதாகப் பொறுக்கின்ற
மஹீமண்டலப் பெரும்பொறைதன் மஹாபுஜபலத் தாற்றாங்கி
புஜகநாயன் தரணிதாரண ஹரணபராஜித புஜபலனுப்
உலப்பிலிமங்கலத் தெதிர்ந்ததெவ்வ ருடலுதைத்த செந்நீர்
நிலப்பெண்ணிற் கங்கராகமென நிப்பாதிருந்தும்
மடைப்பாயுநீர் தஞ்சையர்கோன் தானைவரை வைப்பூரிற்
படைப்பரிசுகந்த கத்தன் பணை புழைக்கையுங்
கொடும்பைமா நகர்நிறைந்த குரைகடலருந்தா....
இடும்பைஉற்றிரியத்த.......யோதை யமர்கண்டும்
புனற்றன்னிடை வடகரையிற் பொழில்புடைசூழ் மதிள்வஞ்சிக்
கனறவழவிழித் தெதிர்ந்தவீரர் கவந்தமாடக் கண்சிவந்துஞ்
சேவலுயர் கொடிக்குமா னனைச்சீறித் தென்றிசைக்

காவலனது கரி துரகபதாதி....களத்தவியப்
பூம்புனலு வற்பதிஇல் வாம்புரவி வலங்காட்டிஉம்
விஜயத்வஜும் விசும்பணவச் செங்கோற்றிசை விளிம்பணவக்
குஜைமாவுங் கொலைக்குன்றமுங் குருதிஆறுமுங் குணங்கும்
மருடவர்த்தன ரடிவணங்க மஹேந்த்ரபோக மனுபவித்த
விகடபடவந் ஸ்ரீகாந்தந் மீநாங்கித சைலேந்திரன்
ராஜசிகாமணி தென்னவ ராஜிதகுணகண நங்கோன்
எண்ணிறந்த ப்ரஹ்மதேயமும் எண்ணிறந்த தேவதானமும்
எண்ணிறந்த பள்ளிச்சந்தமும் எத்திசையு மினிதியற்றி
...லாதி ஒலிகடல்போ லொருங்குமுன்னந் தானமைத்த
நலிராசசிங்கப் பெருங்குளக்கீழ்ச் சூழனக ரிருந்தருளி
ராஜ்யவர்ஷம் இரண்டாவதினெதிர் பதினைங்காவது யாண்டில்
மாக்கொழுவூர்க் கூற்றத்து வருபுனல்வாய்க் குண்டாற்றுப்
புத்தூரென்று பெயரெய்திய கொத்தார்பொழிற் க்ராமத்திற்
காரை கௌசிக கோத்ரத்தி லக்நிவேஸ்ய கல்பத்திலோம்
வாழ்நகரில் மிக்கா னுயர்தருபெரும்புகழ் செட்டி
குலம்தங் குவலைய சுந்தரன் நலமிகு பாஸ்கரநந்தநன்
தென்னவர்கோன் ஸ்ரீபராந்தகன் ஸ்ரீவீரநாரண னருளால்
வடகளவழி நாட்டின்கட் டிசைச்சுடர் மங்கலமென்னு
மிடனுடைய ப்ருஹ்மதேயமேகபோக மாப்பெற்றோன்
பத்மாஸந ஸதிர்ஸனையின பலர்புகழ் பாஸ்கரஞ்செட்டிதன்
மாமகன் ஸாதுமார்க்கன் ஸத்வமித்ரன் சுகுணாலயநிடைக்
கமலவனச் செங்குடிக் கௌசிகன் பராந்தகன்றனக்
கனுக்கிரஹ புத்தியனாகி முன்னுரைத்த அரைசர்பிரான்
அந்தண்புன லழனாட்டில் நற்செய்கை புத்தூரதனை
மந்தர கௌரவ மங்கலமென்றுதன் பெயரிட்டுக்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டருளி

ஏகபோக ப்ருஹ்மதேயமாக நன்குகொடுத் தருளினான்
மாகந்தோய் குடைமன்னவன் ஸ்ரீராஜஸிம்ஹவர்மன்

சோழநாட்டுப் புல்லமங்கலத்து சடையபிரான் பட்டஸோமயாஜி விண்ணப்பஞ்செய களவழிநாட்டு வேம்பற்றூர்க் கூற்றங்கோனை ஆளாகவும் கீழ்வேம்பனாட்டு சூரக்குமான் குடிகாவல் நாயகனாகவும்

திருக்கானப்பேர்க்கூற்றத்துச் சிருசெவ்வூர் நக்கங்காடனும் மிழலைக்கூற்றத்து நடுவிற்கூற்றிற் றஞ்சலூர்ப் படாரஞ்சொலேடம் களத் திருக்கைப் பெருங்காக்கூர்க்கோன் வேளானும் கணக்கராகவும் அழநாட்டு நாட்டார் நின்றெல்லைகாட்டப் பிடிசூழ்ந்த பெருநான்கெல்லை—

(இன்னும் வரும்.)

A. S. இராமநாத ஐயர்.

---

உ

## 1925ம் வருஷம் ஏப்பிரல்மீ 29உ (குரோதன வருஷம் சித்திரைமீ 17உ) காலை 8½ மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி அவர்கள், M. A., B. L.,
அக்கிராசனம் வகித்தவர்.
2. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.
3. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், B.A., B.L.
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1924ம் ௵ டிசம்பர் ௴ முதல் 1925ம் ௵ மார்ச்சு ௴ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ள-ள-ஸ்ரீ உ. நா. அப்பாஸாமி ஐயர் அவர்கள், மிராசுதார், தஞ்சாவூர்.

(2) நவநீதகிருஷ்ணபாரதி அவர்கள், தமிழ்ப்பண்டிதர், தெல்லிப் பழை, யாழ்ப்பாணம்.

III. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோத்னைசெய்யும்படி மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

IV. சங்கத்தின் வருஷோத்ஸவத்தைநடத்தத் தேதிகுறிப்பிடவேணுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராஸனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

V. சங்கக் கலாசாலை மாணவர்போஷணைக்காக மாதந்தோறும் ரூபா 10 உதவிவருவதாக வாக்களித்து அந்தப்படி உதவிவருகிற பட்டமங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ அ. வீர. அ. அடைக்கப்பசெட்டியார் அவர்களுக்குச் சங்கத்தார் வந்தனமளிக்கின்றார்கள்.

VI. சங்கத்தின் அங்கத்தினராகிய மகா-ள-ள-ஸ்ரீ ம. வேலுசாமித்தேவரவர்களும், நெடுவை திரு. ராமஸ்வாமி ஐயங்காரவர்களும் காலஞ்சென்றமைக்குச் சங்கத்தார் அநுதாபமொழி கூறி அதனை ரிக்கார்டில் பதிவுசெய்து ஷெயார்களின் குடும்பத்தார்க்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

VII. 1925ம் ௵ ஏப்ரல் ௴ 6, 7, 8 ஆம் தேதிகளில் திருநெல்வேலி சென்டரில் நடைபெற்ற சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளைப்பற்றி மாட்சிமை தங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் 14-4-25ல் எழுதிய அபிப்பிராயம் அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை,
29—4—1925

S. S. பாரதி,
அக்கிராசனம் வகித்தவர்.

# கௌடில்யரது அர்த்தசாஸ்திரம்

(தொகுதி ௨ ௨ல் ௨௪௰-ஆம் பக்கத்தொடர்ச்சி)

## பிரகரணம்-க-வித்தைகளின் வகைதெரிதல்

## வார்த்தைநிலையும் தண்டநீதிநிலையும்.

## அத்தியாயம் ௪.

உழவு நிரையோம்பல் வாணிகம் என்பன வார்த்தை. இது, தானியம் பசு பொன் பிற சிறப்பில்பொருள் தொழில் இவற்றைக் கொடுத்து உதவுகின்றது. வார்த்தையாலுண்டாகும் பொருளாலும் படையாலும் அரசன் தன் பக்கத்தினரையும் பிறரையும் வசீகரிக்கிறான்.

ஆந்வீக்ஷிகீ த்ரயீ வார்த்தை இவற்றைப் பேணற்குக் காரணமாயிருப்பது தண்டம். தண்டத்தை உபயோகிப்பது தண்டநீதி. அது தம்மிடம் இல்லாதவற்றை உண்டுபண்ணுகின்றது. உண்டுபண்ணியவற்றைக் காக்கின்றது. காத்தவற்றைப் பெருக்குகின்றது. பெருக்கியவற்றை உரியாருக்கு வகுக்கின்றது*. உலகயாத்திரை† தண்டநீதியைச் சார்ந்திருக்கின்றது. ஆதலால் உலகயாத்திரையை விரும்புவோன் எப்பொழுதும் தண்டத்தைக் கைக்கொண்டிருக்கவேண்டும்.

தண்டத்தைப்போல் உயிர்களை வசப்படுத்துவது வேறொன்றுமில்லையென்பர் ஆசிரியர்.

அங்ஙனமல்லவென்பது ‡கௌடில்யரது மதம். ஏனென்றால், கடுந்தண்டமுடையோனைக் குடிகள் வெறுக்கின்றனர். மிருதுதண்டமுடையோனை இகழ்கின்றனர். செங்கோலனைப் பூசிக்கின்றனர். நன்றாயறிந்து வழங்கப்படும் தண்டம் அறம் பொருளின்பங்களின்பாற் படுகின்றது. விருப்பு வெறுப்புக்களாலும் அறிவின்மையாலும் கெட்ட

---

* இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும் வல்ல தரசு.
(திருக்குறள், ௩௮௫.)

† உலகயாத்திரை—உலகத்தின் நடைபேறு.

‡ தன்மையிற்கூறுமிடத்துத் தம்பெயரைக்கூறுதல் தொன்னூலாசிரியர் வழக்கு.

வழியிற் பிரயோகிக்கப்படும் தண்டம் வானப்பிரஸ்தன் துறவி யாகிய இவர்க்கும் கோபத்தையுண்டுபண்ணும்; இல்லறத்தார்விஷயத்திற் சொல்லவும்வேண்டுமோ? தண்டம்நிகழாவிடில் *மாத்ஸியநியாயம் உண்டாய்விடும். செங்கோலரசன் இல்லையெனின் வலியோன் மெலியோனை யழித்துவிடுவான்; செங்கோலாற் காக்கப்படுவனாயின் மெலியோன் சக்தனாயிருப்பன்.

அரசனால், செங்கோல்கொண்டு காக்கப்பட்டதும் நான்குவருணநிலைகளையுடைத்தாயதுமாய உலகம் தத்தமக்கோதிய அறத்தின்வழுவாதொழுகித் தத்தம்நெறிக்கண் நிற்கின்றது.

**விநயாதிகாரமென்ற முதலதிகரணத்தில் வித்தைகளின் வகைதெரிதலில் வார்த்தைநிலையும் தண்டநீதியும் ஆன நான்காம்அத்தியாயம் முற்றிற்று.**

---

## பிரகரணம் ௨ பெரியோரையடைதல்.

## அத்தியாயம் ரு.

---

ஆதலான் மூன்றுவித்தைகளும் தண்டத்தை ஆதாரமாகவுடையன. விநயமூலமான தண்டம் உயிர்கட்குப் பாதுகாப்பைச் செய்கின்றது.

விநயம் இயற்கை செயற்கை யென இருவகைப்படும். ஆசிரியனது முயற்சி உரியவனுக்கன்றி அல்லாதவனுக்கு விநயத்தை உண்டுபண்ணுவதில்லை. கேள்வியில் ஆர்வம் கேட்டல் உணர்தல் உள்ளத்தமைத்தல் தெளிதல் ஊகித்தல் வேண்டாதனவிடுத்தல் மெய்யுணர்வு என்ற புத்திகுணங்களுடையானுக்கு வித்தையால் விநயம் ஏற்படுவதன்றி அல்லானுக்கேற்படுவதில்லை.

வித்தைகள் ஒவ்வொன்றையும் கற்பிக்கும் ஆசிரியனது ஆணைமுறைப்படி சிஷ்யனுக்கு விநயமும் ஒழுக்கமும் ஏற்படுகின்றன.

சௌளகருமம்செய்தபிறகு எழுத்தும் கணிதமும் பயிலவேண்டும். உபநயநம்செய்தபின் த்ரயியையும் ஆந்வீக்ஷிகியினையும் அறிவிற்பெரியா

---

* மாத்ஸியநியாயம்—பெருமீன் சிறுமீனைவிழுங்குவதுபோல் வலியோன் மெலியோனையழிக்கும் வழக்கு.

ரிடமும், வார்த்தையை *அத்தியக்ஷரிடமும், தண்டநீதியை அதனைக் கற்றும் உபயோகித்துமிருப்பவரான ஆசிரியரிடமும் பயிலவேண்டும்.

பதினறுவயதுவரை பிரமசரிய ஒழுக்கம். பிறகு †கோதானமும் விவாஹமும். விநயம் மிகுதற்கு அறிவிற்பெரியோரது இணக்கம் எப்பொழுதும் வேண்டும். ஏனெனின் அதன்மூலமாய் விநயம் உண்டாகின்றது.

பகலை மூன்றுகூறிட்டு, முதற்கூற்றில் யானை குதிரை தேர் படைக்கலம் என்றிவற்றைப்பற்றிய நூல்களைக் கற்பது. மூன்றும் கூற்றில் இதிஹாஸம் கேட்பது. இதிஹாஸமென்பது புராணம் ‡இதிவிருத்தம் $ஆக்கியாயிகை ¶உதாஹரணம் அறநூல் நீதிநூல் என்றிவை ஆறினையும். எஞ்சிய பகலிரவு வேளையில் புதியன கற்றலும் கற்றன சிந்தித்தலும் நன்றுணராதவற்றை யடிக்கடி கேட்டலும் செய்யவேண்டும்.

கல்வியால் அறிவுவிளக்கமும் அதனால் கற்றவழிநிற்றலும் அதனால் அடக்கமும் உண்டாகும். இதுவே வித்தையின் பெருமை.

வித்தையால் விநீதனான அரசன் குடிகளது விநயத்திலும் பல்லுயிர்கட்கும் நன்மைபுரிவதிலும் விருப்பமுடையனாய்ப் பூமிமுற்றுமாள்வன்.

விநயாதிகாரம் என்ற முதலதிகாரணத்தில்

பெரியோரையடைதல் என்னும் ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

G. ஹரிஹரசாஸ்திரி.

---

* அத்தியக்ஷன்—வரவு செலவு முதலியவற்றை மேல்விசாரணை செய்யும் அதிகாரி.

† கோதானம்—இருபிறப்பாளர் பதினறும்வயதில் மயிர்களையும் ஓர் வேத விரதம்.

‡ இதிவிருத்தம்—மாபாரதம் இராமாயணம் முதலியன.

¶ ஆக்கியாயிகை—தேவர் மானுடர் கதை.

$ உதாஹரணம்—வேதத்தின்பொருளை நியாயமுறையால் ஆராயும் மீமாம்ஸா சாஸ்திரம்.

ஸ்ரீ:

# மதிப்புரை.

—(●)—

பாரதவெண்பா:—இது, பெருந்தேவனார்பாரதமென்று வழங்கப்பட்டதாய் இடையிடையே சிறிதுசிறிதாய் ஆங்கிலகலாசாலைமாணவர்களுக்குத் தமிழ்ப்பாடமாகவைக்கப்பட்ட அளவில் அச்சிடப்பட்டதல்லது முழுதும் ஒருங்குசேரப் பரிசோதித்துப் பதிக்கப்படாதிருந்தமையால், பலபிரதிகளைவைத்து ஆராய்ந்து, பண்டிதர் ஸ்ரீமத். அ. கோபாலையரவர்களால் நன்கு பரிசோதித்து அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இது சங்கப்புலவராகிய பெருந்தேவனார்செய்ததன்றென்றும், இற்றைக்குச் சற்றேறத்தாழ ஓராயிரம்வருடங்கட்குமுன் செய்யப்பட்ட பழமையுடையதென்றும் முகவுரையில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. இந்நூல், இப்போதகப்பட்டமட்டில் உத்தியோகபர்வத்திலிருந்து துரோணபர்வத்தளவில் அபூர்த்தியாயுள்ள ௮௩௦ பாடல்களும், இடையிடையேயுள்ள உரைநடையும் அடங்கிய ௨௭௦ பக்கங்களையுடையது. இதற்கு புரோபஸர் S. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஆங்கிலத்தில் எழுதியமுகவுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பினைப் பதிப்பாசிரியர், தாம் தமிழ்பயில உதவிபுரிந்த தமிழ்ச்சங்கஸ்தாபகரான ஸ்ரீமத். பொ. பாண்டித்துரைத்தேவரவர்கட்கு உரிமைசெய்து அவருருவப்படமும் பதித்து வெளியிட்டிருக்கும் நன்றியறிதல் பாராட்டத்தக்கது. இதன்விலை ரூபா ௩-௨-௦. வேண்டுவோர், பண்டிதர் ஸ்ரீமத் அ. கோபாலையரவர்கள், செந்தமிழ்மந்திரம் புத்தகசாலை, பிராடீஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

கூடல்மான்மியம்:—இது கூடல் என்னும் விஷ்ணுக்ஷேத்ரமாஹாத்மியத்தைப் பிரம்மாண்டபுராணங்கூறியவாறு தமிழ்ச்செய்யுளால் இயற்றப்பட்டிருக்கும் தலபுராணத்தின் இனிய தமிழ்நடையாக, ராமேசுவரதேவஸ்தானம் ஸம்ஸ்க்ருதவித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமத். டி. என். அப்பனையங்காரால் எழுதப்பட்டு, ஹரிஸமயதிவாகரப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. இதனால், மதுரையின் வைஷ்ணவ

மான பிரபாவங்களெல்லாம் அறியலாம். இதன் விலை அணு ௬. வேண்டுவோர் ஹரிஸமயதிவாகரம் பத்திராதிபர், ஸ்ரீவிஷ்ணுசித்த ராமாநுஜஸபை, கூடலழகப்பெருமாள் சந்நிதித்தெரு, மதுரை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

அறநூல்:—இது, ஸ்ரீ சுத்தானந்தபாரதியாரால், குறள்வெண்பாவாலாக்கப்பட்டிருக்கிறது. இதில், கடவுளியல்முதல் சாதனவியல் ஈறாகப் பதினைந்தியல்களுள்ளன. அவை இக்காலத்துலகநடைக் கேலாவென்று தமக்குத்தோன்றும் சிறப்பியல்புகளை விலக்கி, இக்காலத் தோற்றத்துக்கேற்றவாறு சமத்துவம், சகோதரத்துவம், ஜனஆட்சி முதலிய புதியதர்மங்களையும், எல்லோருக்கு மொத்த பொதுவான நெறிகளையும் போதிக்கின்றன. இதன் விலை அணு ௪. வேண்டுவோர் சேரன்மாதேவிப் பரத்வாஜாசிரமத்திற் பெறலாம்.

தமிழர்:—இது தமிழர் முன்னேற்றத்துக்குரிய பலவகைத்துறைகளும் வளர்ச்சிபடையுமாறு திருச்சிராப்பள்ளியினின்று ஸ்ரீமத். உ. க. பஞ்சரத்தினம்பிள்ளையவர்கள் பத்திராதிபத்தியத்தில் மாதமொருமுறை புத்தகமாகவெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. இப்பத்திரிகையின் நோக்கத்துக்குப் பொருத்தமான பலகட்டுரைகளும், உழவு, வாணிகம், கைத்தொழில், அறிவு முதலியவற்றின் வளர்ச்சிக்குரிய பல குறிப்புக்களும் யாவரும் விரும்புமாறு எழுதப்படுகின்றன. இதன்வருடச்சந்தாரூபா இரண்டரை. மாணவர்பதிப்புரூபா இரண்டு. வெளிநாடுகளுக்குரூபா மூன்று. ஆயுட்காலச்சந்தாரூபா இருபத்தைந்து. தனிச்சஞ்சிகை அணு நான்கு. வேண்டுவோர், அமைச்சர், 'தமிழர்' நிலயம், 23மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்ப்பொழில்:—இது, கரந்தைத்தமிழ்மன்றத்தினின்று திருவாளர் ஆர். வேங்கடாசலம்பிள்ளையவர்களிதழாசிரியவுரிமையால், திங்களொருமுறை நாற்பதுபக்கங்கொண்ட சுவடிவடிவாகத் தோன்றும்

செந்தமிழ் வெளியீடு. தமிழ்வளர்ச்சிகருதி இதன்கண் நல்லதமிழறிஞர்களால் ஆராய்ந்தெழுதப்பட்ட பல கட்டுரைகள் வெளிவருகின்றன. சொல்லக்கருதிய பொருள்கள் பெரும்பாலும் பிறமொழிவிரவாது தமிழ்மொழியால் வழங்கப்பயில்வார்க்குப் பயன்படுமாறு எழுதப்படுகிறது. இதற்கு ஆயுள்வரி ரூபா இருபத்தைந்து. உறுப்பினர்க்கும் மாணவர்க்கும் உள்நாடாயின் ஆண்டுவரி ரூபா இரண்டு. வெளிநாடாயின் ரூபா இரண்டரை. ஏனையர்க்கு ஆண்டுவரி ரூபா மூன்றரை. தனி மலர் விலை அணா நான்கு. வேண்டுவோர் இதழாசிரியர், தமிழ்ப்பொழில், கரந்தைத்தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

கல்வியும் உலகநிலையும்:—இது கல்வியின் அவசியத்தையும் பயிலவேண்டிய முறையையும் ஒவ்வொருநாட்டாரும் தம்தம் தாய்மொழியிலேயே எல்லாக்கலைகளையும் பயிலமுயலவேண்டுமென்பதையும் விளக்கும் நோக்கத்தோடெழுந்த ஒரு சிறியகட்டுரை. கமலாவதி முதலிய நாடகங்கள் எழுதிய கி. வேங்கடராமையரவர்களால் எழுதப்பட்டது. இதன் விலை 0–0–6. வேண்டுவோர், கி. வேங்கடராமையர் அவர்கள், கிருஷ்ணமந்திரம், வியாசராயபுர அக்கிரஹாரம், மதுரை என்ற விலாசத்திற் கெழுதிப் பெறலாம்.

அன்பாநந்தன்:—இது, மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை, நாகர்கோவிலிலிருந்து ஸ்ரீமத். C. A. பெருமாள் என்பவரால் வெளியிடப்படுவது. இதன் முதலிரண்டுபகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள், பல அரிய விஷயக்குறிப்புகள் காணப்படுகின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா ஒன்று. வெளிநாடுகளுக்கு ரூபா க–ச–0. தனிப்பிரதி அணா இரண்டு. வேண்டுவோர் பத்திராதிபர், அன்பானந்தன், நாகர்கோவில் என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

நவீனவிவசாயம்:—இது, நம்நாட்டுக் கிருஷித்தொழிலின் அபி விருத்திகருதிப் பிறநாட்டுக்கிருஷித்தொழின் முறைகளையும் நம்நாட்டார் அறியுமாறு ஸ்ரீமத். ஜி. ராஜகோபால் என்பவரால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் வருஷச்சந்தா ரூபா மூன்று. வேண்டுவோர், ஜி. ராஜகோபால், பத்திராதிபர், நவீனவிவசாயம், 50 வாலாஜாரோட், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

தோத்திரப்பாமாலை:—இது, சோவிற்பட்டி என்று பெயர் வழங்குகின்ற திருமங்கைநகர்ச் சொன்னமலைக்கதிரேசன்மீது விருதுநகர் க்ஷத்திரியவித்யாசாலைத்தமிழாசிரியர் S. சுப்பிரமணியக்கவிராயரவர்களால் இயற்றப்பட்டது. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

'கண்டன் சேண்டுவெளியிற் குதிரையேறியபோது கூத்தர் பாடியது.'

822. கண்டன் பவனிக் கவனப் [1]பரிநெடுங்கால்
மண்டளக்கா தேயிருந்த வாறென்னோ—கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை.

'கண்டன் துலாபுருடதானம்பண்ணியபோது கூத்தர் பாடியது.'

823. தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண்
டுழுகின்ற தார்க்கண்ட னேறிய ஞான்றி னுவாமதிபோய்
விழுகின்ற தொக்கு மொருதட்டுக் காலையில் வேலையில்வந்
தெழுகின்ற ஞாயிறொத் தான்குல தீப னெதிர்த்தட்டிலே.

ஷை துலாபுருடதானத்திற் புகழேந்தி பாடியது.

824. பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ.

கூத்தர் குலோத்துங்கசோழனுலாப் பாடியபோது பாடிய வெண்பா.

825. இன்றும்யான் மீள்வ தறியே னிரணியனை
அன்றிரு கூறு வடர்த்தருளிக்—கன்றுடனே
ஆவின்பின் போன வனக னனபாயன்
மாவின்பின் போன மனம்.

கூத்தர்பாதி புகழேந்திபாதி பாடியது.

826. வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகுக் கிடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.

அனபாயன் (இரண்டாங்குலோத்துங்கன்,)

827. மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

828. அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்தர்—அன்னதே

(822) தமிழ்நா. 122. [1]பரிநெருக்கால், மண்டளக்கா. (823) தமிழ்நா. 124. (824)ஷை 141. (825)குலோத்துங்கசோழனுலாவிறுதி. (826)தனிப்பா, (827) தண்டி. 88 மேற், (828) ஷை 32 மேற்.

வாரி புடைசூழ்ந்த வையகத்துக் கில்லையாற்
சூரியனே போலுஞ் சுடர்.

829. என்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யனபாயன் பொன்னெடுந்தோள்—முன்னே
தனவே யென்றாளுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.

830. தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினும்
கைம்மாறுங் கால முடைத்தன்றே—எம்மாவி
அன்னவனை யாழி யனபா யனைமலரான்
மன்னவனை மானுமோ வான்.

831. பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால்—நீதி
அடுத்துயர்ந்த கீர்த்தி யனபாயா யார்க்குங்
கொடுத்தியெனக் கொள்கின் றிலம்.

832. தண்கவிகை யாலுலகந் தாங்கு மனபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை—யெங்கும்
மதியத் துடனிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள்.

கூத்தர் இராசராசசோழனைப் பாடியது.

833. அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந்—தென்றிசையில்
நீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

## மூன்றாங் குலோத்துங்கன்.

834. புயல்வாய்த்து வளம்பெருகப் பொய்யாத நான்மறையின்
செயல்வாய்ப்பத் திருமகளுஞ் செயமகளுஞ் சிறந்துவாழ
வெண்மதிபோற் குடைவிளங்க வேல்வேந்த ரடிவணங்க
மண்மடந்தை மனமகிழ மனுவினெறி தழைத்தோங்கச்
சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செலநடக்கக்
கற்பகாலம் புவிகாப்பப் பொற்பமைந்த முடிசூடி
விக்கிரம பாண்டியன் வேண்டிவிட்ட தாண்டால்

(829) தண்டி 3. (830) ஷை. 50. (831-832) ஷை. 46. (833) இராச ராசசோழனுலாவிருத்தி, (834) சாஸனம்.

வீர பாண்டியன் மகன்பட வேழகம்
படமறப் படைபடச் சிங்களப் படைமூக்
கறுப்புண் டலைகடல் புகவீர பாண்டியனை
முதுகி டும்படி தாக்கி மதுரையும்
அரசுங் கொண்டு சயத்தம்ப நட்டு
அம்மதுரையு மரசுநாடு மடைந்தபாண்டியற் களித்தருளி
மெய்ம்மலர்ந்த வீரக்கொடியுடன் தியாகக் கொடியெடுத்துச்
செம்பொன் வீர சிங்கா தனத்துப்
புவனமுழு துடையாளோடும் வீற்றிருந் தருளிய
கோப்பரகேசரி வன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு—.

### இரவிசோழன்

835. இரவி துணைத்தா ளிகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழியு மேவா—அரசிரிய
மின்பொழியுஞ் செவ்வேல் வெறியோ ரினங்கவரப்
பொன்பொழியுஞ் செங்கைப் புயல்.

836. சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும்—மீதாம்
அனகமதி தோற்றிக் குமுத மளிக்குந்
தனத னிருநிதிக்கோன் றன்.

### (சோழனைப்பற்றிய புகழாப்புகழ்ச்சி.)

837. போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉம்—நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு.

### (சோழன் செல்வம்.)

838. கன்றும் வயவேந்தர் செல்வம பலகவர்ந்தும்
என்றும் [1]வறியோ ரினங்கவர்ந்தும்—ஒன்றும்
அறிவரிதாய் நிற்கு [2]மளவினதா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு.

839. மலயத்து மாதவனே போன்று மவன்பால்
அலைகடலே போன்று மதனுட்—குலவு

---

(835) தண்டி. 118. (836) வீரசோ.அலங.30; தண்டி. 78. (837) தண்டி. 84. (838) வீரசோ அலங. 29; தண்டி. 74; [1]வயவ ரினங்கள். [2]மளவின தாற் சோரி. (839) தண்டி. 32.

நிலவலய மேபோன்று நேரியன்பா னிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு.

(சோழன் கொடைச்சிறப்பு.)

840. செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர்—ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாங்
[1]காதலித்து வந்தடைந்தோர் கண்.

(சோழன் பகைநட்புக்களாலாவன)

841. தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
வெள்ள வரிமா னிடர்மிகுப்ப—உள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு.

(சோழன் வீரச்சிறப்பு)

842. பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்னை ரசைந்து முகுளிக்கும்—தன்னோர்
பொரவந்த வேந்தர் புனை கடகச் செங்கை
யரவிந்த நூறு யிரம்.

843. அடல்வணங்கு கழற்செவ்வே லலங்குதார்ச் செம்பியன்றன்
கெடலருங் கிளர்வேங்கை யெழுதித்தம் முயிரோம்பா
உடல்சமத் துருத்தெழுந்த வொன்னாத பல்லரசர்
கடகஞ்சேர் திரண்முன்கை கயிற்றொடும் வைகினவே.

(*முப்பேட்டுச்செய்யுள்)

844. ஈரித ழிணர்நீல மிடைதெரியா தரிந்திடூஉம்
ஆய்கதி ரழற்செந்நெ லரியே யாதே
ஆய்கதி ரழற்செந்நெ லகன்செறுவி லரிந்திடூஉங்
காவிரி வளநாடன் கழலே யாதே
காவிரி வளநாடன் கழல்சேர்ந்த மன்னர்க்
காரர ணிற்ற லரிதே யாதே.

845. சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்—பொற்றொடி

(840) தண்டி.21. [1]காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண். (841) வீரசோ. அலங். 30; தண்டி. 77. மேற். (842) வீரசோ. அலங். 26; தண்டி. 63. (843) யாப். வி. 15; வீரசோ. யாப். 12. *முப்பெட்டுச்செய்யுள். (844) யாப். வி. 93. (845) தொல். பொரு. 307 மேற்; தண்டி 50 மேற்.

யாழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்.

846. புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுப—புனனாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து [1]கொண்டமையா லின்று.

847. ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக்—காமெருழுதற்
கெஞ்சினு ரில்லெனினு மாய னிகனெனுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்.

848. அடிநோக்கி னாழ்கடல் வண்ணன்றன் மேனிப்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரோன்—முடிநோக்கித்
தேர்வளவ னாத றெளிந்தேன்றன் சென்னிமேல்
ஆரலங்க லேறன்றிற் றுக் கண்டு.

(சூரியனுக்குஞ் சோழனுக்குஞ் சிலேடை.)

849. செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்.

850. மன்ன ரொளிமுடிமேன் மாணிக்கங் கால்சாய்த்து
மின்னி விரித்த வெயிற்கதிர்கள்—துன்னி
அடிமலர்மேற் சென்றெறிப்ப நின்று னவிரொண்
கொடிமலர்வேய் நீண்முடியெங் கோ.

851. இசையெல்லாங் கொட்ட வெழிற்றுனை யூர்ந்து
வசையிலா மன்னர்வந் தேத்த—இசையும்
அடிசில் பருகி யணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கோழியார் கோ.

(சோழனை வாழ்த்தியது.)

852. இமையா முக்க ணிலங்குசுடர் வாய்ந்த
உமையொரு பாகத் தொருவன் காப்பநின்

(846) தொல். பொருள். 307 மேற்; தண்டி. 50 மேற். [1]கொண்டமையினல். (847) வீரசோ. அலங். 23 மேற்; தண்டி. 50 மேற். (848) தொல். பொரு. 307 மேற். (849) வீரசோ. அலங். 30; தண்டி. 77 மேற். (850) வீரசோ. அலங். 17 மேற். (851) யாப். வி. 94. (852) தொல். பொரு 422 பேரா.

பல்கிளைச் சுற்றமொடு நல்லிதி னந்தி
நீடுபல் வாழிய வாய்வாட் சென்னிநின்
ஒருகுடை வரைப்பி னீழற் பெற்றுக்
கிடந்த வெழுகட லுப்பண்
அகலிரு விசும்பின் மின்னினும் பலவே.

(சோழநாடு.)

853. [1]வான்பொய்யாது தீம்பெயல்பெய்து
மால்யாறுபோந்து கால்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிரைவளஞ்சான்று
வரையாதுவந்து பலாப்பழுத்துவீழ்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புநீங்குமஞ்சு [2]துயின்றுபெயர்ந்துபோந்து
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா யாணர்த் தென்ப வென்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தருஉம் வேந்த
னொருநிலைத் தண்குடை நிழற்று நாடே.

(சோழன்பகைவர்நாடு.)

854. தண்டண்டலைத் தாதுறைத்தலின்
[3]வண்டோட்டுவயல் வாய்புகைபுகரந்
தயலாலையி னறைக்கடிகையின்
வழிபோகுவர (?) மறித்துருபுகிளர்ந்
தோங்குசென்னிலை [4]வாங்குகதிர்தரீஇப்
போதுதாங்குசிலை மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குகிளிக்குழாந்
திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகொளும்
நன்னர் நன்னா டென்னா குவகொல்
பொன்னிநன் னாட்டுப் பொருந னெங்கோன்
தாடோய் [5]தடக்கை வல்லமன்
நாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே.

---

(853) தொல். செய். 20; பேரா; நச். [1]வான் பெய்யாது. [2]துயின்று பெயர்ந்துபோந்து. (854) தொல். செய். 20. பேரா. நச். [3]வண்டோடுவயல் வாய்புகைபரந். [4]வாங்குகதிர் தரும். [5]தடக்கை மல்லவன்; தகையு மல்லவன்.

855. சீற்றமிகுபு செல்சினஞ்சிறந்து
கூற்றொத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவும் பொலங்கொடியெடுத்துப்
[1]புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேம்புமீதணிபு போந்துபடத்தொடுத்து
வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச்சுரும்புகிளர்ந்து
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்
சொரிந்துதூங்குகடாத்து [2]விரைந்துமலைந்துதொலைத்து
மணங்கமழாரமொடு தயங்கச்சூடிய
வென்வேற் சென்னி பொன்னியற் புனைகழல்
பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே.

(சோழனை மாயோனாகக் கூறியது)

856. குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெறுப்
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு.

857. நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினு ளன்றே—மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியநீ யிந்நாள்
மணந்த தடமலர்மேன் மாது.

858. வீரியத்தால் வெய்யோன் வெகுளியா லூழித்தீக்
காரியத்தாற் சாணக் கியன்.

பாண்டியன்.

(திருமாலும் பாண்டியனும்.)

859. கண்ண னவனிவன் மாறன் கமழ்துழாய்க்
கண்ணி யவற்கிவற்கு வேம்புதார்—வண்ணமும்
மாய னவனிவன் சேயன் மரபொன்றே
ஆய னவனிவன் கோ.

860. பல்வலையார் கூடிப் பகர்வதூஉம் பண்புணர்ந்த
சொல்வலையா ரெல்லாருஞ் சொல்வதூஉம்—மெல்லிணர்ப்

(855) தொல். செய். 20 பேரா; நச். [1]புகவேற்றுமலைந்து. [2]விரவுப்பலவு தொலைத்து. (856) தொல், பொரு. 60. நச். (857) வீரசோ. அலங். 32; தண்டி. 84. (858) வீரசோ. அலங். 15 மேற். (859) தொல். பொரு. 307. (860) யாப். வி. 60.

பூந்தாம நீண்முடியான் பூழியர்கோன் றாழ்தடக்கைத்
தேந்தாம வேலான் றிறம்.

861. காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.

862. கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலம் பாடி மலிவெய்தக்—கங்கையாள்
பூம்புன லாகங் கெழீஇயினான் போரடுதோள்
வேய்பார் தெரியலெம் வேந்து.

863. நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையா கோறா வெனவும்—அடைப்பையான்
கொள்ளச் சிறுகோல் கொடுத்தான் றலைபெறினும்
மௌ்ளா தியாங்கண் டிலம்.

(*முப்பேட்டுச் செய்யுள்.)

864. நித்திலங் கழலாக நிரைதொடி மடநல்லார்
எக்கர்வா னிடுமணை லிணரே யாதே
எக்கர்வா னிடுமண லிணர்புணர்ந் திசைந்தாடும்
கொற்கையார் கோமானே கொடியே யாதே
கொற்கையார் கோமான் கொடித்திண்டேர் மாறற்குச்
செற்றா ணிற்ற லரிதே யாதே.

(குறளடி வஞ்சிப்பா.)

865. தாழிரும் பிணர்த்தடக்கைத்
தண்கவு ளிழிகடாத்துத்
தாழ்வாகத் தமபேணுக்
கடுஞ்சினத்த களிற்றெருத்தின்
நிலனெளியத் தொகுபீண்டிக்
கடன்மருளப் படைநடுவண்
ஏற்றுரியி னிமிழ்முரசங்
கூற்றுட்க வெழீஇச்சிலைப்பக்
கேள்ல்லவர் மிடல்சாய
வாள்வலியா னிலம்வவ்வி

(861) யாப். வி. 95.; நன். 413 மயிலை. (862) பி. வி. 48 உரை.
(863) யாப். வி. 9. *மூப்பெட்டுச் செய்யுள் (864, 865) யாப். வி. 93.

முழுதாண்டவர் வழிகாவல
குன்றமருளச் சோறுகுவைஇப்
புனன்மருள நன்னெய்சொரிந்து
திருமறைமுதல்வர் வழிகாட்ட
ஆகுதியி னழலருத்திப்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லிசையான் மீக்கூறும்
கொற்கையார் குலவேறே
கூடலா ரடுபொருந
வென்றியா
னல்கியார்த்த வரிக்கிணையின்
மரபுளியின் வரவிசைப்ப
நனிவிரும்பி நயனோக்கி
இனிவேண்டாரின் கிணைத்தொழிலென
எனக்கொவ்வாமைப் பெரிதருளித்
தனக்கொப்பத் தலையளித்தனன்
அதற்கொண்டும்
கலங்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ
நெய்கனிந்தன வறையென்கோ
குய்கொண்டன துவையென்கோ
எனைப்பல வெடக்குத்தண்டாது
வைகலுறூஉங் கைகவிசொரிசரலை
விலங்குகதி ரவிர்வெள்ளி
யலங்குபெண்ணை வழியுறையினும்
குளஞ்சேர்ந்து சனிகொட்பினும்
[1]அருந்தே மாந்தனம் யாமே
வருந்தல் வேண்டா வாழ்கவின் [2]றூளே.

(செம்பூட்சேய் பவனிச்சிறப்பு.)

866, பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானையிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே; (தரவு)
ஆங்கொருசார்—

[1]அருந்தே மாந்தனம், [2]னருளே, (866) யாப். வி. 86; வீரசோ. யாப், 12. மேற்.

உச்சியார்க் கிறைவனு யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்—

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
[1]சக்கிரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்—

மால்கொண்ட பகைதணிப்பான் [2]மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியோனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே; (தாழிசை)

அஃதான்று (தனிச்சொல்)

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
[3]நிறைபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே. (சுரிதகம்)

## அரிகேசரி—நெடுமாறன் (முதல் மாறவர்மன்)

### பாண்டிக்கோவைப்பாடல்கள்.

(நெல்வேலிப்போர்.)

867. நீடிய பூந்தண் கழனிநெல் வேலி நிகர்மலைந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை யரிகே சரிதெவ்வர் போலழுங்கி
வாடிய காரண மென்னைகொல் லோவுள்ளம் வள்ளலுக்கே. (22)

868. பொறிகெழு [4]கெண்டை வடவரை மேல்வைத்துப் பூமியெல்லாம்
நெறிகெழு செங்கோ னடாநெடு மாறனெல் வேலிவென்றான்
வெறிகமழ் [5]பூங்கண்ணிக் கானல் விளையாட் டயர்நின்ற
செறிகுழ லார்பலர் யார்கண்ண தோவண்ணல் சிந்தனையே. (106)

---

[1]சக்கரங். [2]மாதடிந்து. [3]நின்றபுக. (867–868) இறையனார்களவிய லுரை மேற்கோள். [4]கெண்டைபொன் மால்வரை. [5]பூங்கன்னிக்.

(பாழிப்போர்).

869. கோடன் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றை செம்பொன்
பாடன் மணிவண்டு பாண்செயப் பாரித்த பாழிவென்ற
ஆட னெடுங்கொடித் தோரி கேசரி யந்தண்பொன்னி
நாடன் பகைபோன் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே. (309)

(செந்நிலத்துப்போர்).

870. மைதா னிலாததங் கல்வி மிகுத்து வருவதெண்ணிப்
பொய்தா னிலாதசொல் லார்செல்வர் போலும்புல் லாதமரே
செய்தார் படச்செந் நிலத்தைக் கணைமழை திண்சிலையாற்
பெய்தான் விசாரிதன் றென்புன னாடன்ன பெண்கொடியே. (235)

(சங்கைமங்கைப்போர்).

871. தகரக் குழலாய் தகவில ளேசங்க மங்கைவென்ற
சிகரக் களிற்றுச்செங் கோனெடு மாறன்றென் கூடலின்வாய்
மகரக் கொடியவன் றன்னிள வேனின் மலர்விலைக்குப்
பகரக் கொணர்ந்தில்லந் தோறுந் திரியுமிப் பல்வளையே. (266)

(கோட்டாற்றுப்போர்)

872. வானுடை யான்முடி மேல்வளை யெற்றியும் வஞ்சியர்தங்
கோனுடை யாப்படை கோட்டாற் றழிவித்துங் கொண்டவென்றி
தானுடை யான்றென்னன் சத்ரு தரந்தரன் பொன்வரைமேன்
மீனுடை யான்கொல்லி வேங்காய் நினக்கு விடையில்லையே. (149)

(நறையாற்றுப்போர்)

873. வில்லவன் றானை நறையாற் றழிந்துவிண் ணேறவெல்ல
வல்லவன் மாறனெங் கோன்முனை போல்சுரம் வானுதலாள்
சொல்லவன் பின்சென்ற வாறென்ற போழ்தெனக் குச்சொல்லுமே
பல்லவ மாக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவே. (187)

(கடையற்போர்)

874. தெவ்வா யெதிர்நின்ற சேரலர் கோனைச் செருக்கழித்துக்
கைவா னிதியமெல் லாமுட னேகடை யற்கவர்ந்த
நெய்வா யயினெடு மாறன் பகைபோ னினைந்துபண்டை
யொவ்வா வருவு மொழியுமென் னேவெள்ள னுள்ளியதே. (24)

(சேவூர்ப்போர்)

875. சிலையுடை வானவன் சேவூ ரழியச் செருவடர்த்த
இலையுடை வேனெடு மாறன் கழலிறைஞ் சாதவர்போல்

---

(869–875) இறையனார்களவியலுரை மேற்கோள்.

நிலையிடு சிந்தைவெந் நோயொடி நீள்புனங் கையகலான்
முலையிடை [1]நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே. (92)

(பூலந்தைப்போர்)

876. பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் னாடனையாய்
அருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி னாடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மட லூரக் கருதுவரே. (79)

(விழிஞத்துப்போர்)

877. விண்டார் படவிழி ஞக்கடற் கோடியுள் வேல்வலங்கைக்
கொண்டான் ருடைமன்னன் [2]கூடற் குடவரைக்கொம்பொடொக்கும்
வண்டார் குழன்மட மங்கை மதர்வைமென் னோக்கமென்போற்
கண்டா ருளரே லுரையார் பிறவின்ன கட்டுரையே. (31)

(குளந்தைப்போர்).

878. செல்லா ரவரென் றியானிகழ்ந் தேன்சுரஞ் [3]செல்வதென்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றுவையிரண்டும்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் [4]தண்ண மெலிவிக்குமே. (293)

(களத்தூர்ப்போர்).

879. கலவா வயவர் களத்தூ ரவியக் கணையுதைத்த
கொலையார் சிலைமன்னன் கோனெடு மாறன்றென் கூடலன்ன
இலவார் துவர்வாய் மடந்தைநம் மீர்ம்புனத் தின்றுகண்டேன்
புலவார் குருதி யளைந்தவெண் கோட்டுப் பொருகளிறே. (70)

(நெடுங்களத்துப்போர்).

880. பலமன்னு புள்ளினம் பார்ப்புஞ் சினையு மவையழிய
உலமன்னு தோளண்ண லூரக்கொ ளாய்கொ லொலிதிரைசூழ்
நிலமன்ன னேரியன் மாற னெடுங்களத் தட்டதிங்கட்
குலமன்னன் கன்னிக் குலைவளர் பெண்ணைக் கொழுமடலே. (80)

(வல்லத்துப்போர்).

881. ஊனங் கடந்த வொருகுடை வேந்த னுசித னென்னார்
மானங் கடந்துவல் லத்தம ரோட்டிய கோன்படிமேல்
ஈனங் கடந்தசெங் கோன்மன்னன் றெம்முனை போலெரிவேய்
கானங் கடந்துசென் றேபொரு டேர்வது காதலரே. (259)

---

[1]நோபவர். (876-881) இறையனார் களவியலுரை மேற்கோள். [2]கொல்லிக் குடவரைக் கொம்பனொக்கும். [3]செல்லத்தன்கண். [4]தன்னை.

(ஆற்றுக்குடிப்போர்).

882. ஆழித் திருமா லதிசயற் காற்றுக் குடியுடைந்தார்
சூழிக் களிற்றிற் றுனைகதிண் டேர்துயர் தோன்றின்றுகாண்
கோழிக் குடுமியஞ் சேவறன் பேடையைக் கால்குடையாப்
பூழித் தலையிரை யார்வித்துத் தானிறகும் பூம்புறவே. (249)

(மணற்றிப்போர்).

883. கொங்கை தளரினுங் கூந்த னரைப்பினு மேந்தன்மற்றிவ்
வங்கை யடைக்கல மென்றே கருதி யருளுகண்டாய்
கங்கை மணாளன் கலிமத னன்கடி மாமணற்றி
மங்கை யமரட்ட கோன்வையை நாடன்ன மாதரையே. (175)

(நெடுமாறனது சிவபத்தி).

884. மூன்றான் முகிழ்முலை யார முயங்கி முறுவலுண்டு
சென்றார் வரவிற்குத் தூதா யெழுந்த செழும்புலிப்பை
வென்றா னழிய நறையாற் றகத்துவென் றான்முடிமேல்
நின்றான் மணிகண்டம் போலிரு டாங்கிய நீண்முகிலே. (256)

885. மெல்லிய லாய்நங்கண் மேல்வெய்ய வாய்விழி ஞத்துவென்ற
மல்லிய றோண்மன்னன் சென்னி நிலாவினன் வார்சடையான்
சொல்லியல் காமனைச் சுட்டசெந் தீச்சுடர் சென்றவன்மேற்
செல்லிய பாரித்த போன்றன பிண்டியின் றேமலரே. (297)

(பாண்டியன் பூதம்பணிகொண்டது முதலிய செயல்கள்.)

886. ஓதங் கடைந்தமு தாக்கி யமரர்க் குணக்கொடுத்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வாய்
ஏதம் பழியினொ டெய்துத லானிர வும்பகலு
மாதங் கடைந்தமென் னோக்கி திறத்தைய வாரன்மினே.

(பாண்டியன் அகத்தியன்வாய்த் தமிழ்கேட்டது).

887. அரைதரு மேகலை யன்னமன் னாயன் றகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசித னொண்பூம் பொதியில்
வரைதரு வார்புனங் கையக லான்வந்து மாவினவும்
விரைதரு கண்ணியன் யாவன்கொ லோவொர் விருந்தினனே. (89)

(பாண்டியன் இடிக்கொடியுடைமை).

888. அடிக்கண் ணதிருங் கழலரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் ணிடியுரு பேந்திய தென்னவன் கூடலன்னாய்
வடிக்கண் ணிரண்டும் வளநகர் காக்கும்வை வேலிளைஞர்
துடிக்கண் ணிரண்டுங்கங் குற்றலை யொன்றுந் துயின்றிலவே. (214)

---

(882—888) இறையனார் களவியலுரை மேற்கோள்.

## பராந்தகன்—நெடுஞ்சடையன்.
## (வேள்விகுடிச் சாஸனப்பகுதி).

889. கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த
**பல்யாகமுதுகுடுமிப் பெருவழுதி**யெனும் பாண்டியாதி ராசனால்
நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச்
சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
**கொற்கைகிழா னற்கொற்றன்** கொண்டவேள்வி முற்றுவிக்கக்
கேள்வியந்த ணாளர்முன்பு கேட்கவென் றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று **வேள்விகுடி**யென் றப்பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார்வேந்த னப்பொழுதே
நீரோட்டிக் கொடுத்தமையா னீடுபுக்தி துய்த்தபின்
அளவரிய வதிராசரை யகலநீக்கி யகலிடத்தைக்
**களப்ர**னெனுங் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன்முளைத்த பருதிபோற் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு
விடுகதி ரவிரொளி விலகவீற் றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்துக்
கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கன மமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்ன ரொளிநக ரழித்த
**கடுங்கோ** னென்னுங் கதிர்வேற் றென்னன்
மற்றவற்குமகனாகி மகீதலம்பொதுநீக்கி மலர்மங்கையொடு மண
அற்றமில் பரவைத்தானை யாதிராச னவனிசூளாமணி [னடர்ந்த
எத்திறத்து மிகலழிக்கு மத்தயானை **மாறவர்மன்**
மற்றவற்கு, மருவினியவொரு மகனாகி மண்மகளை மறுக்கடிந்து
விக்கிரமத்தின் வெளிப்பட்டுவிலங்கல்வெல்பொறிவேந்தர் வேந்தன்
சிலைத்தடக்கைக்கொலைக்களிற்றுச் செழியன்வானவன் செங்கோற்
மற்றவற் குப்பழிப் பின்றிவழித் தோன்றி [**சேந்தன்**
உதயகிரி மத்தியத் துறுசுடர் போலத்
தெற்றென்று திசைநடுங்க மற்றவன் வெளிப்பட்டுச்
சூழியானை செலவுந்திப் **பாழி**வா யமர்கடந்தும்
வில்வேலிக் கடற்றானையை **நெல்வேலி**ச் செருவென்றும்

விரவிவந் தடையாத பரவரைப் பாழ்படுத்தும்
அறுகாலினம் புடைதிளைக்குங் குறுநாட்டவர் குலங்கெடுத்தும்
கைந்நலத்த களிறுந்திச் **சேந்நிலத்துச்** செருவென்றும்
பாரளவுந் தனிச்செங்கோற் கேரளனைப் பலமுறையும்
உரிமைச் சுற்றமு மாவும் யானையும்
புரிசை ம(ா)மதிற் புலியூ ரப்பகல்
நாழிகை யிறவாமைக் கோழியுள் வென்றுகொண்டும்
வேலாழியும் வியன்பரம்பு மேலாமைசென் றெறிந்தழித்தும்
இரணியகர்ப்பமுந் துலாபாரமுந் தரணிமிசைப் பலசெய்தும்
அந்தணர்க்கு மரசர்க்கும் வந்தணைகென் றீத்தளித்த
மகரிகையணி மணிநெடுமுடி
**அரிகேசரி** யசமசமன் **சிரீமாறவர்மன்**
மற்றவற்கு மகனாகிக் கொற்றவேல் வலனேந்திப்
பொருதூருங் கடற்றானையை மருதூருண் மாண்பழித்
**தாய்வேளை** யகப்பட வேயென்னுமை யெறிந்தழித்துச்
செங்கோட்டும்? புதான்கோட்டுஞ் செருவென்றவர் சினந்தவிர்த்
கொங்கலரு நறும்பொழில்வாய்க் குயிலோடு மயிலகவும் [துக்
மங்கலபுரமெனு மாநகருண் மாரதரை யெறிந்தழித்
தலைகடல் வளாகம் பொதுமொழி யகற்றிச்
சிலையும் புலியுங் கயலுஞ் சென்று
நிலையமை நெடுவரை யிடவயிற் கிடாய்
மண்ணினி தாண்ட தண்ணளிச் செங்கோற்
றென்ன வானவன் செம்பியன் சோழன்
மன்னர் மன்னன் மதுரகரு நாடகன்
கொன்னவின்ற நெடுஞ்சுடர்வேற் கொங்கர்கோமான் **கோச்**
மற்றவற்குப் புத்திரனாய் மண்மகளது பொருட்டாக [**சடையன்**
மத்தயானை செலவுந்தி மானவேல் வலனேந்திக்
கடுவிசையா லெதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகரழித்துக்
கறுவடைந்த மனத்தவரைக் குறுமடைவாய்க் கூர்ப்பழித்து
மன்னிகுறிச்சியுந் திருமங்கையு முன்னின்றவர் முரணழித்து
மேவலோர்கடற்றானையோ டேற்றெதிர்ந்தவரைப் பூவலூர்ப்புறங்
கொடும்புரிசை நெடுங்கிடங்கிற் கொடும்பாளூர்க்கூடார் [கண்டும்
கடும்பரியுங் கருங்களிறுங் கதிர்வேலிற் கைக்கொண்டும்
செழும்புரவிப் பல்லவனைக் குழும்பூருட் டேசழிய
எண்ணிறந்த மால்களிறு மிவுளிகளும் பலகவர்ந்தும்
தரியலராய்த் தனித்தவரைப் பெரியலூர்ப் பீடழித்தும்

பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்
டழகமைந்த வார்சிலையின் மழகொங்க மடிப்படுத்தும்
ஈண்டொளிய மணியிமைக்கு மெழிலமைந்த நெடும்புரிசைப்
பாண்டிக்கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பதுமபாதம்பணிந்
கனகராசியுங் கதிர்மணியு மனமகிழக் கொடுத்திட்டுங் [தேத்திக்
கொங்கரவ நறுங்கண்ணிக் கங்கராசனொடு சம்பந்தஞ்செய்தும்
எண்ணிறந்தன கோசகசிரமு மிரணியகர்ப்பமுந் துலாபாரமும்
மண்ணின்மிசைப் பலசெய்து மறைநாவினர் குறைதீர்த்துங்
கூடல்வஞ்சி கோழியென்னு மாடமா மதில்புதுக்கியும்
அறைகடல் வளாகங் குறையா தாண்ட
மன்னர் மன்னவன் றென்னவர் மருகன்
மான வெண்குடை மான்றேர் மாறன்
மற்றவர்க்கு மகனாகி மாலுருவின் வெளிப்பட்டு
மூன்று கொற்ற முரசுட னியம்பக்
குளிர்வெண்குடை மண்காப்ப
பூமகளும் புலமகளு நாமகளு நலனேத்தக்
கலியரசன் வலிதளரப் பொலிவினொடு வீற்றிருந்து
கருங்கட லுடுத்த பெருங்கண் ஞாலத்து
நாற்பெரும் படையும் பாற்படப் பரப்பிக்
கருதா துவந் தெதிர்மலைந்த காடவனைக் காடடையப்
பூவிரியும் புனற்கழனிக் காவிரியின் றென்கரைமேற்
றண்ணாக மலர்ச்சோலைப் பெண்ணாகடத் தமர்வென்றும்
தீவாய வயிலேந்தித் திளைத்தெதிரே வந்திறுத்த
ஆய்வேளையுங் குறும்பரையு மடலமரு ளழித்தோட்டிக்
காட்டுக்குறும்பு சென்றடைய நாட்டுக்குறும்பிற் செருவென்றும்
அறைகடல் வளாக மொருமொழிக் கொளீஇய
சிலைமலி தடக்கைத் தென்ன வானவன்
அவனே,
ஸ்ரீவரன் ஸ்ரீமனோகரன் சினச்சோழியன் புனப்பூழியன்
வீதகன்மஷன் விநயவிச்ருதன் விக்ரமபாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்யசாசனன் மனூபமன் மர்த்திதவீரன்
கிரிஸ்திரன் கீதிகிந்நரன் கிருபாலயன் கிருதாபதானன்
கலிப்பகை கண்டகநிஷ்டுரன் கார்யதக்ஷிணன் கார்முகபார்த்தன்
பராந்தகன் பண்டிதவத்ஸலன் பரிபூர்ணன் பாபபீரு
குரையுறு கடற்படைத்தானைக் குணக்கிராகியன் கூடநிர்ணயன்
நிரையுறுமலர் மணிநீண்முடி நேரியர்கோ னெடுஞ்சடையன்